

# வாழ்க்கையிலிருந்து வார்த்தைக்கு

கோ. பழனி

ஹ. முத்துக்காந்திமதி

# வாழ்க்கையிலிருந்து வார்த்தைக்கு

தொடக்க வகுப்புகளில் தமிழ்க் கற்பித்தல் தொடர்பான ஆய்வு

கோ. பழனி
ஹ. முத்துக்காந்திமதி

வாழ்க்கையிலிருந்து வார்த்தைக்கு

© Tara Publishing 2004

www.tarabooks.com

ஆசிரியர்கள்:
கோ. பழனி, ஹ. முத்துக்காந்திமதி

திட்ட ஒருங்கிணைப்பாளர்: வ.கீதா

ஆய்வு மையம்: தாரா கல்வியியல் ஆய்வு மையம், சென்னை

குழந்தைகளின் மீதும்
மொழியின் மீதும்
உண்மையான பற்றோடு
செயலாற்றி வரும்
ஆசிரியர்களுக்கு ...

# பொருளடக்கம்


புகுமுன் — 6

படிக்கும் பழக்கம் உண்டா? — 11

மொழிக்கல்வியும் குழந்தைகளும் — 12

களம் தந்த செய்திகள் — 18

மொழிக்கல்வி குறித்து ஆசிரியர் கருத்து — 24

மொழிக்கல்வி குறித்து கல்வியியலாளர்களின் கருத்துக்கள் — 28

எது குழந்தை மொழி? — 28

தொடக்க வகுப்புகளில் தமிழ் மொழியைப் பயிற்றுவித்தல் — 35

குழந்தைகளும் கற்பனையும் — 44

தமிழ் மொழிக்கல்வி: விவாதப்புள்ளிகளும் கருத்துக்களும் — 47

தமிழ் மொழிக்கல்வியில் பாடச்சுமை — 54

இறுதியாக — 59

பின்னிணைப்புகள் — 62

# புகுமுன்

வ.கீதா

சென்னையில் இயங்கிவரும் தாரா பதிப்பகம், குழந்தை-களுக்கான நூல்களை உருவாக்கும் ஒரு நிறுவனம். குழந்தைகள் வாழும் சூழலை மையமாகக் கொண்டே நூல்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது எங்கள் எண்ணம். குழந்தைகளுடைய உலகம், அனுபவம், ஆற்றல் ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும் செழுமைப்படுத்தும் வகையிலும் எங்கள் நூல்களை உருவாக்கி யுள்ளோம். எங்களுடைய நோக்கங்கள் இரண்டு:

1. குழந்தைகளின் மொழி ஆளுமையை வளர்ப்பது
2. அவர்களின் கற்பனையை விரிவாக்குவது

இந்த அடிப்படையில் தமிழில் ஏழு நூல்களை வெளி யிட்டுள்ளோம். அவை:

1. சர்வர் பாபு
2. பூக்காரம்மா பொன்னி
3. ஆப்பிரிக்கப் பாட்டி சொன்ன அற்புதக் கதைகள்
4. ஐந்திணை நிலங்கள்
5. மாலா - பெண்கள் சொன்ன குட்டிக் கதை
6. குப்பை மேடுகளில்
7. குரங்கின் கூத்து

ரொம்ப சீக்கிரமே பெண் குருவிங்க சோர்ந்து போயிடுச்சுங்க. புத்திசாலியான ஒரு பெண் குருவி, தன்னோட அக்கா தங்கச்சிங்க எல்லாத்தையும் கூப்பிட்டு, "ஏய் இத இப்படியே விட்டு வக்கலாமா? நம்ம புருஷங்க தங்க வேலைய செய்யறதில்ல. இந்த சோம்பேறிங்கள பழையபடி உழைப்பாளிங்களா மாத்துறது நம்ம கையிலதான் இருக்கு. அவங்க வேலையையும் நாமளே செஞ்சுகிட்டு கிடக்காம, பேசாம பாறை உச்சில போய் உட்காந்திடுவோம். என்னதான் நடக்குதுன்னு பொறுத்துப் பார்ப்போம். என்னாங்கறீங்க?"ன்னுச்சாம். எல்லா பெண் குருவிங்களும் அது சொன்னத ஏத்துக்கிட்டு மலை முகட்டில இருக்கற பெரிய பாறைங்கள்ல போய் கமுக்கமா உட்கார்ந்துகிச்சுங்க.

*- ஆப்பிரிக்கப் பாட்டி சொன்ன அற்புதக் கதைகள், ப.9, 1998*

வள்ளிக்கிழங்கு வேரில் காய்ப்பது. அச்செடியைத் தோண்டித்தான் கிழங்கை எடுக்க வேண்டும். இலையை வைத்து வள்ளிக்கிழங்குச் செடியை இனம் காண்போம். சாப்பிடக்கூடிய வள்ளிக்கிழங்குச் செடியைக் கண்டால் அதைச் சுற்றியுள்ள மண்ணை ஒரு கம்பியால் கிளறி விடுவோம். குறைந்தது இரண்டு அடி ஆழமாவது தோண்டினால் தான் குண்டை எடுக்க முடியும். சமதளத்தில் நின்று கொண்டு கிழங்கைத் தோண்டுவது மிகவும் சிரமம். சரிவில் நின்றுகொண்டு எடுப்பதுதான் சுலபம். கிழங்கை எடுத்தவுடன், வீட்டிற்கு எடுத்துப் போய் நன்றாகக் கழுவுவோம். அதை உரித்து பானையில் போடுவோம். அந்தப் பானையில் தண்ணீர் ஊற்றுவோம். மிளகு, பூண்டு, மஞ்சள்தூள், உப்பு எல்லாவற்றையும் அரைத்து கிழங்கோடு சேர்ப்போம். அப்புறம் பானையை மூடி, கிழங்கை நன்றாக அவிப்போம்.

*- ஐந்திணைநிலங்கள், ப.14, 1999*

மேற்கண்ட ஒவ்வொரு நூலிலும் நாங்கள் வெவ்வேறு வகையான பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டோம். உதாரணமாக, *ஆப்பிரிக்கப் பாட்டி சொன்ன அற்புதக் கதைகள்* என்ற நூலில் பேச்சுமொழியைப் பயன்படுத்தியுள்ளோம். நமது பழந்தமிழ் நிலப்பிரிப்பை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட சூழல்களில் வாழும் குழந்தைகளுடைய வாழ்க்கையை அவர்களுடைய பார்வையிலேயே பதிவுசெய்துள்ள நூல் *ஐந்திணை நிலங்கள்.* சாலைவாழ் குழந்தைகளைப் பற்றியதான *குப்பை மேடுகளில்* என்ற நூலில், நாவல் இலக்கியத்தில் பயன்படுத்தப்படும் இரட்டை மொழிவழக்கைப் (பேச்சுமொழி மற்றும் பொதுமொழி) பயன்படுத்தியுள்ளோம். 'நம்மைச் சுற்றிய உலகம்' என்ற தலைப்பின் கீழ் *பூக்காரம்மா பொன்னி*, *சர்வர் பாபு* ஆகிய இரு நூல்கள் வெளிவந்துள்ளன. குழந்தைகள் அன்றாடம் சந்திக்கும் பூ விற்கும் பெண், ஓட்டல் சர்வர் ஆகியோரின் ஒரு நாளைய வாழ்வை இவை கூறுகின்றன. இவ்விரு நூல்களிலும் அந்தந்தப் பணியார்களின் நிழற்படங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நேரில் பார்ப்பதுபோல் உள்ள எதார்த்தமான இப்படங்கள், குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கக் கூடியவையாக அமைந்திருக்கின்றன.

மேற்கண்ட நூல்களில் (குறிப்பாக *ஆப்பிரிக்கப் பாட்டி சொன்ன அற்புதக் கதைகள், குப்பைமேடுகளில்* ஆகியவற்றில்) நாங்கள் பயன்படுத்திய மொழி, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பல கேள்விகளைத் தோற்றுவித்தது.

"ஏய் ஏய், நில்லு!" அந்தப் பெண்ணின் பெயர்கூட அவனுக்குத் தெரியாது.

"ஓம் பேரென்ன?" அவள் பின்னால் ஓடிக்கொண்டே கேட்டான். சட்டென்று நின்று அவன் பக்கம் திரும்பினாள் அந்தப் பெண். "ஓகோ! எம் பேரே தெரியாமத்தான் எம் பின்னாலே ஆட்டுக்குட்டி மாதிரி ஓடியாரயாக்கும். எம் பேரு ஜெயா."

"நா ஒண்ணும் ஓம் பின்னாலேயே வரல."

"பின்னாடி வராம என்னவா? யார் ஒனக்கு சாப்பாடு கண்டுபிடிச்சுக் கொடுத்தது?"

"சரி, அத்தவுடு. நானும் கூட வரவா? நீ எங்க போறே?"

"வேணும்ன்னா வா. இந்த சாக்கு ரொம்பிடுச்சு. நா வீட்டுக்குப் போய் இன்னொன்னு எடுத்தாரணும்."

அடுத்த அரைமணி நேரம் வேகமாக நடந்து ஒரு பாலத்தை அடைந்தார்கள். அதற்கடியில் சகிக்க முடியாத நாற்றத்துடன் கருப்பேறிய கால்வாய்த் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

"இது திருவல்லிக்கேணி. இதாங் கூவம் வாய்க்கா" என்றாள் ஜெயா.

வேலு அந்தத் தண்ணீரைப் பார்த்தான். வாய்க்காலா? இதுவா? வாய்க்காக் கரையில் தேங்கிய நீர்க்குட்டைகளுக்கிடையே குடிசைகள் காணப்பட்டன. தகரம், ரப்பர், டயர், செங்கல், மரம், பிளாஸ்டிக் என்று கைக்கு வந்த பொருட்களில் அந்த குடிசைகள் கட்டப்பட்டிருந்தன. எந்த நேரத்திலும் அவை சரிந்து வாய்க்காலில் விழுந்துவிடும் போல் இருந்தன.

*- குப்பைமேடுகளில், ப.10 - 12, 1999*

** இலக்கண ஒழுங்கில்லாத மொழியில் குழந்தைகளுக்கான நூல்களை எழுதுவது சரியாக இருக்குமா?*

** பேச்சு மொழியைப் படிப்பது குழந்தைகளுக்குக் கடினமாக இராதா?*

** ஒலி உச்சரிப்பை எழுதுவதற்கென்று, ஒழுங்கமைக்கப் பட்ட எழுத்து வடிவம் எதுவும் தமிழில் கிடையாதே?! நீங்கள் பயன்படுத்தி உள்ள வரிவடிவங்கள் குழப்பதைத் தராதா?*

** ஒரே சொல் பலவிதமாக (சாதி, வட்டாரம், தலைமுறை சார்ந்து) உச்சரிக்கப்படும் சூழலில் நீங்கள் கையாண்டுள்ள பேச்சு மொழிக்கான அடிப்படை என்ன?*

எங்களை நோக்கி வீசப்பட்ட இக்கணைகளை அலட்சியப் படுத்தாமல் வேறுவிதமாக யோசித்தோம். பொதுவாக, குழந்தைகளுக்கான நூல்கள் என்றால், 'இப்படித்தான் இருக்க வேண்டும்' (அறிவுரை கூறுவதாக, நல்லொழுக்கங்களை போதிப்பதாக, தரப்படுத்தப்பட்ட மொழியில் அமைந்ததாக) என்ற எழுதப்படாத வரையறை உள்ளது. அதை மீறும்போது எழுந்த சிக்கல்கள்தாம் மேற்குறிப்பிட்ட கேள்விகளாகப் பரிணமித்துள்ளதை எங்களால் உணர முடிந்தது. குழந்தைகள்

*தமிழ் மொழியைக் கற்பிக்க வேற்று மொழிச்சொற்களைப் பயன்படுத்தி அதாவது, குழந்தைகளுக்கு 'ஐ' என்ற எழுத்தைச் சொல்லிக் கொடுக்க 'ஐஸ்கிரீம்' என்று சொல்லிக் கொடுத்தல் குறித்து ...*

தமிழ் இலக்கியத்திலும் தமிழ்ப் பேச்சு மொழியிலேயும் பிற மொழிச் சொற்கள் இருந்து வருகின்றன. பிற மொழிச் சொற்களை எங்கே நாம் எதிர்க்கிறோம் என்றால், ஆதிக்க உணர்வோடு வருகின்ற - திணிக்கப்படுகின்ற - போதுதான். அதுவல்லாமல் வேறுவகையாக வரும்போது பாதிப்பில்லை. 'சைக்கிள்' என்ற சொல் இருக்கிறது. பொருள், குழந்தைகளுக்கு அறிமுமான பொருள். 'காபி' என்ற பொருள், அறிமுகமான பொருள். குழந்தைகளின் ரத்த நாளங்களிலே கட்டமைக்கப்பட்ட ஒரு இலக்கண மொழி அமைப்பு இருக்கிறதல்லவா? அதைச் சிதைக்காத அளவில்தான் இப் பிற மொழிச் சொற்களும் பயன்படுத்தப்படும்.

சைக்கிளுக்குச் செலவழித்தான்.

காபியை அருந்தினான்.

'சைக்கிளுக்குச் செலவழித்தான்' என்பதற்கு உருபுகளெல்லாம் தமிழ்ப் பெயர்ச் சொற்களுக்கு ஒட்டுகிற மாதிரிதான் ஒட்டுகின்றன. இவ்வகைச் சொற்களுக்குத் தமிழ்ச் சொல்லை ஆக்கினால் மட்டும் போதுமா? அதை எப்படி புழங்குமொழியாக்குவது என்பதுதான் சிக்கல். காபியை, 'குளம்பி' என்று மொழிபெயர்ப்பதல்ல பெரிய வேலை. அதை எப்படி புழங்கு மொழியாக்குவது? அதற்கான நேரமென்ன? அதற்காக ஊடகங்களுடைய உதவி என்ன? இவ்வகையான சொல் வழக்குகள் மொழியைக் கெடுக்க நியாயமில்லை. 'ஐஸ்கிரீம்' என்ற பொருள் கிராமத்துக்கு அந்நியமானது என்பது மட்டுமே தவிர, இதுபோன்ற சொற்கள் பயன்படுத்தப்படுவதால் மொழியினுடைய கட்டமைப்பு சிதையாது. சொற்களைப் பொறுத்தமட்டில் தீண்டாமைக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க முடியாது. ஆதிக்க உணர்வோடு இருந்தால் மட்டுமே அவைகள் எதிர்க்கப்பட வேண்டியவை என்று நான் நினைக்கிறேன்.

*- பேரா. தொ. பரமசிவனுடனான உரையாடலிலிருந்து*

உலகத்துடன் ஒட்டிய, அவர்களுக்குப் பழகிய மொழியிலேயே அமைந்த, அறிவுரை கூறாத, நூல்களை வடிவமைக்க முடியாதா? குழந்தைகளுக்கான நூல்கள் பற்றிய பொதுவான சிந்தனையையும் பொது மொழியையும் கடந்ததாக நூல்கள் ஏன் அமைக்கப்பெறல் கூடாது? என்ற கேள்விகளை எழுப்பினோம். தொடர்ந்து மேலும் சில ஐயங்களுக்கு விடைகாண முற்பட்டோம்.

1. குழந்தைகள் பாடநூல்கள் தவிர்த்த மற்ற நூல்களைப் படிக்கிறார்களா? குறைந்தபட்சம் பாடநூல்களில் சொல்லப் படும் உலத்துடனும் மனிதர்களுடனும் தங்களை அடையாளப் படுத்திக்கொள்கிறார்களா?

2. தொடக்க நிலையில் குழந்தைகளால் எந்த அளவிற்குப் பொது மொழியையும் எழுத்தின் வரி வடிவத்தையும் உள்வாங்கிக் கொள்ளமுடிகிறது?

3. பேச்சு மொழியிலிருந்து பொது மொழிக்கும் வரி வடிவத்திற்கும் வருகையில் எத்தகைய சிக்கல்களைக் குழந்தைகள் எதிர்கொள்ள நேர்கிறது?

# படிக்கும் பழக்கம் உண்டா?

எங்களது முதற் கேள்விக்கான விடையை அறிய நாங்கள் ஒரு சிறு ஆய்வை, ஒப்பிட்டளவில் எழுத்தறிவு விகிதம் அதிகமாக உள்ள தென்மாவட்டங்களில் செய்தோம். சுமார் பதின்மூன்று, பதினான்கு வயது மாணவர்களிடம் இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

* படிக்கும் பழக்கம் உண்டா?

* எத்தகைய நூல்களை விரும்பிப் படிப்பீர்கள்?

* எங்கிருந்து நூல்களைப் பெறுகிறீர்கள்?

* பள்ளி நூலகத்தில் என்னென்ன வகையான நூல்கள் உள்ளன?

* உங்களுக்குத் தேவையான தகவல்களை நூல்களிலிருந்து பெற முடிகிறதா?

* ஓய்வு நேரங்களில் படிப்பீர்களா? வேறு ஏதாவது செய்வீர்களா?

என்பது போன்ற கேள்விகள் அடங்கிய ஒரு வினாப்பட்டியலை அவர்களிடம் கொடுத்து, பதில்களைப் பெற்றோம். இதன்வழி, மாணவர்களிடம் பொதுவான வாசிப்புப் பழக்கம் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அவர்களுக்குப் பாடநூல்கள் படிப்பதையும் அது தவிர்த்த நூல்கள் படிப்பதையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ள முடியவில்லை. நூலகங்களுக்குச் செல்லும் பழக்கமும் குழந்தைகளிடம் மிகக் குறைவாகவே உள்ளது. தங்கள் பள்ளி நூலகத்தில் என்னென்ன நூல்கள் உள்ளன என்ற கேள்விக்குப் பெரும்பாலானோர் 'தெரியாது' என்றே பதிலளித்திருந்தனர். 'ஏன் தெரியாது?' என்று கேட்டதற்கு, 'பள்ளி நூலகத்தின் உள்ளே எங்களை அனுமதிப்பதில்லை' என்று தெரிவித்தனர். ஓய்வு நேரங்களில் அறுபத்தி ஐந்து சதவீதம் பேர் தொலைக்காட்சி பார்ப்பதாகவும் இருபது சதவீதம் பேர் விளையாடுவதாகவும் பதிலளித்திருந்தனர். மீதமுள்ளோர், பெண்கள் அம்மாவிற்கு உதவுவதாகவும் ஆண்கள் ஊர் சுற்றுவதாகவும் பதிலளித்தனர்.

குழந்தைகளின் தேவைக்கேற்ற, அவர்கள் வாசிப்பதை ஊக்குவிக்கும்படியான நூல்களோ, வாசிப்பு என்பதன் இன்பத்தை, தேவையை வலியுறுத்தும் பண்பாடோ - வங்காளம் போன்ற மொழிகளுடன் ஒப்பிடுகையில் - நம்மிடையே இல்லை என்பதையும் அவை முறையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய அவசியத்தையும் மேற்கண்ட ஆய்வின் வழி உணர்ந்தோம்.

# மொழிக்கல்வியும் குழந்தைகளும்

தொடக்க நிலையில் தமிழ்க் கற்பித்தல் தொடர்பான பிற கேள்விகளுக்கு விடைகாணும் முகமாக மற்றொரு ஆய்வை மேற்கொண்டோம். இந்த ஆய்வை மூன்றாகப் பகுத்துக் கொண்டோம்.

1. தொடக்க வகுப்பு (முதல் மூன்று வகுப்புகள் மட்டும்) தமிழ்ப் பாடநூற்கள் பற்றிய ஆய்வு

2. தொடக்கப் பள்ளிகளில் களஆய்வு

3. குழந்தைக் கல்வி ஆர்வலர்கள், மொழியியலாளர்கள் கல்வியாளர்கள் ஆகியோருடன் உரையாடல்

**முதல் மூன்று வகுப்புகளுக்கான தமிழ்ப் பாடநூற்கள் பற்றிய ஆய்வு.**

முன்பிருந்த நூற்களோடு ஒப்பிடுகையில் தற்போதுள்ள (கல்வியாண்டு 2003 - 2004) பாடத்திட்டங்கள் பொதுவாகச் சிறப்புடையவையாகவே இருக்கின்றன. முன்பெல்லாம் பாராமல் எழுதுதல், மனப்பாடம் செய்தல் ஆகியவற்றை மட்டுமே அளவுகோல்களாகக் கொண்டு மாணவர்களைத் தரம் பிரிப்பர். ஆனால், தற்போதுள்ள பாடநூற்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற பல்வேறு திறன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இவை, குழந்தைகளின் வளர்ச்சிக்கு சாதகமானவையே. வெறும் எழுத்துக்கள்ாக மட்டுமல்லாமல் நிறைய படங்களும் புத்தகங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன. திறன்களை மேம்படுத்த பாடங்களின் வழி அளிக்கப்படும் பயிற்சிகள் வரவேற்கத்தக்கவை.

ஆனாலும் பாடநூற்களில் வேறு சில பிரச்சனைகளை நம்மால் இனங்காண முடிகிறது. தமிழ், பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு (தரப்படுத்தப்பட்ட மொழி) என்ற பிரிவுகளுள்ள இரட்டை வழக்கு மொழி. முனைவர் த.பரசுராமன் அவர்கள் குறிப்பிடுவது போல், இவ்விரண்டிற்கும் நடுவில் உள்ள பொதுப்பேச்சுத் தமிழையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான மொழியடுக்குகளைப் பாடநூற்கள் கணக்கில் கொள்ளவில்லை. எழுத்து மொழி மட்டுமே பாடநூற்களில் இடம்பெற்றுள்ளது. வீட்டில் பேசுகின்ற தமிழுக்கும் பள்ளியில்

கற்பிக்கப்படுகின்ற தமிழுக்கும் இடையேயான வேறுபாடுகள் குழந்தைகளை மிரட்சியடையச் செய்கின்றன.

மேலும், குழந்தைகளுக்குத் தெரிந்த சொற்தொகுதிகள் பாடநூற்களில் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன.

"எழுத்தைக்கற்றுக் கொள்வதற்கு முன்னாலேயே குழந்தைகளுக்கு ஒரு மொழி அறிவு இருக்கிறது. அதற்கு இடக்கரடக்கல், மங்கல வழக்கு என்ற இலக்கணச் சொற்கள் தெரியாமல் இருக்கலாம். ஆனால், எந்தச் சொல்லை எங்கு சொல்ல வேண்டும் என்று அதற்குத் தெரியும். சொல்லின் மரபு குழந்தைகளுக்குத் தெரியும். பள்ளிக்கு வரும் குழந்தைக்கு எழுத்து தெரியாதே தவிர சொற்கள் ஏராளம் தெரிந்திருக்கும். அந்தச் சொற்தொகுதியைப் பள்ளிகள் வளர்ப்பது இல்லை என்பது ஒருபுறமிருக்க, அவற்றை முற்றிலும் புறக்கணிக்கவே செய்கின்றன. பாடத்திட்டம், வழக்குச் சொற்களைக் கொச்சையானது எனப் புறந்தள்ளி விடுகிறது" என்று பேரா. தொ. பரமசிவன் அவர்களின் கருத்து கவனிக்கத்தக்கது.

பாடத்திட்ட மொழியானது எந்த ஒரு சூழலையும் உள்ளடக்காமல், அரசியல் மேடைகளில் முழங்கப்படுகின்ற ஒன்றாகவும் தகவல் தொடர்பு சாதனங்களில் (குறிப்பாகத்

*தற்போதுள்ள பாடநூல்களின் உள்ளடக்கம், வடிவம் ஆகியவை குழந்தைகளின் வாழ்க்கையோடு பொருந்தி வருகின்றனவா?*

அப்படிச் சொல்லமுடியவில்லை தான். குழந்தைகளின் காதிலே விழுகின்ற பெரியவர்களின் பேச்சுமொழிக்கும் பாடப்புத்தகங்களிலே தரப்பட்டிருக்கின்ற பொதுமொழிக்கும் வித்தியாசம் இருக்கிறது. குறிப்பாக, வினைமுடிபுகளில் வித்தியாசம் இருக்கிறது. பேச்சு வழக்கில் ஒரே வினை இரண்டுமுறை வரலாம். உதாரணமாக, 'அவர் ஆட்டம் ஆடிக்கிட்டிருக்கறப்ப' என்று ஒரு தொடர் பேச்சு மொழியில் வரும். ஆனால், எழுத்தில் வரும்போது 'அவர் ஆடிக்கொண்டிருந்த போது' என்று மட்டும்தான் வருகிறது. பெயரும் இதேபோல் வரும். எழுத்து மொழிக்கு வரும்போது செறிவிற்குள்ளாக்குகிறீர்கள். பாடநூல்களில் இரண்டு வாக்கியங்களுக்கு இடையில் தொடர்புத் தன்மை குறைவாக இருக்கிறது. அந்தாதி போல் வருகின்ற பேச்சுமொழி எழுத்தில் மாறுகிறது. இப்படி சுருக்குவது ஒன்றும் தவறில்லை என்பது என் கருத்து. வாக்கிய முடிவுகளில் போடப்படுகின்ற 'ஆகும்', 'உள்ளது' என்பன போன்றவை குழந்தைகளுக்கு அந்நியமானவைதான். ஆனால், இவற்றைத் தவிர்க்க முடியாது; ஒதுக்கவும் முடியாது.

*- பேரா. தொ. பரமசிவனுடனான உரையாடலிலிருந்து*

தொலைக்காட்சி மற்றும் வானொலியில்) பயன்படுத்தப்படும் ஒன்றாகவுமே உள்ளது. மொழி, தன்னுடைய பல்வேறு பரிமாணங்களை இழந்து ஒற்றைத் தன்மையுடையதாகத் தமிழ்ப் பாடநூற்களில் பதிவாகியுள்ளது. பெரும்பாலும் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை உள்ளடக்கமாகக் கொண்டே பாடநூற்களில் உள்ள செய்யுள் பகுதிகள் (மூன்றாம் வகுப்புப் பாடநூல் ப.124 *கொன்றை வேந்தன்*, ப.126 *நறுந்தொகை*) அமைக்கப்படுகின்றன.

உரைநடை பகுதியில் குழந்தைகளின் உலகத்திற்குத் தொடர்பில்லாத கதைகளும் நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன. இப்போக்கு, தற்போது பயன்பாட்டில் உள்ள மொழியிலிருந்து மாணவர்களை அந்நியப்படுத்துவதாக இருக்கிறது. இதனால், தாய் மொழியையே உரையின்றி படிக்க முடியாத நிலைக்குத் (மூன்றாம், நான்காம் வகுப்பு மாணவர்கள் கூட) தள்ளப் படுகிறார்கள்.

மேலும், பாடங்கள் அனைத்தும் நகரம் சார்ந்தே எழுதப் படுகின்றன என்கிற குற்றச்சாட்டும் கல்வியாளர்கள் மற்றும்

*தமிழ்மொழியைக் குழந்தைகள் ஆர்வத்தோடு கற்றுக்கொள்ளத் தூண்ட என்ன செய்ய வேண்டும்?*

இன்னமும் குழந்தைப் பாடல்கள் தமிழில் போதுமான அளவிற்கு இல்லை. தேவைக்குப் பத்து விழுக்காடுகூட இல்லை. குழந்தைக் கவிஞர்கள் நிறைய வரவேண்டும். இருக்கிற குழந்தைக் கவிஞர்கள் எல்லாம் ஒரு விஷயத்தைத் எளிமையாகத் தொடவேண்டும் என்று செய்கிறார்களே தவிர கவித்துவமாகச் சொல்லத் தெரியவில்லை. நான் பார்க்கிற குழந்தைக் கவிஞர்கள் ரொம்ப வறட்சியாக இருக்கிறார்கள். இவர்களுடைய கவிதைத் தரமோ குழந்தைகளைப் பிடித்து இழுக்கிற நிலையில் இல்லை. ஒலிநயம் கூட பல இடங்களில் சிதைந்து கிடக்கின்றது. தமிழ்க் கவிஞர்கள் பெரும்பாலும் கவிராயர்களாக இருக்கிறார்களே தவிர கவிஞர்களாக இல்லை. விதிவிலக்காக, சிலர் இருக்கலாம். பாரதிதாசன் கூட குடும்பவிளக்கில் சில குழந்தைப் பாடல்கள் எழுதியிருக்கிறார். அதில் சில சொற்கள் கொஞ்சம் அந்நியமாக இருக்கும். ஆனால், அருமையான கவித்துவத்தோடு கூடிய பாடல்கள் அவை. கவிமணியை விட நல்ல கவித்துவத்தோடு பாரதிதாசன் பாடல்கள் எழுதியிருக்கிறார். அதுபோல் நிறைய குழந்தைக் கவிஞர்கள் வரவேண்டும்.

*- பேரா. தொ. பரமசிவனுடனான உரையாடலிலிருந்து*

ஆசிரியர்களால் முன்வைக்கப்படுகின்றது. சூழலுக்கேற்ற கல்வி வழங்கப்பட வேண்டும் என்கிற குரல்கள் தற்போது ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

"நான் முதல் வகுப்பு ஆசிரியை. பாடத்தில், 'ஜிலேபி' என்று வருகிறது. பையன் கேட்கிறான், 'ஜிலேபின்னா என்ன டீச்சர்?' பையனைக் குற்றம் சொல்லிப் பயனென்ன? அவனது வாழ்க்கைச்சூழல் அப்படி. எங்கள் பள்ளிக் குழந்தைகள் அனைவரும் கிராமத்திலிருந்து வருபவர்கள். அவர்களுக்குக் கருப்பட்டி அல்லது வெல்லத்தில் செய்த மிட்டாய்தான் தெரியும். ஜிலேபி தெரியாது. இதுபோன்று பல சிக்கல்கள். பாடப் புத்தகங்கள் கிராமத்து மாணவர்களுக்குத் தனியாக எழுதப்பட வேண்டும்" என்கிறார் ஓர் ஆசிரியை. இவரது பேச்சில் உள்ள நியாயத்தை மறுப்பதற்கில்லை.

'தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு' செல்லும் கற்பித்தல் கொள்கைப்படி, வட்டார மொழியிலிருந்து பாடங்களைத் தொடங்குவதுதான் சிறப்பாக இருக்கும். எனினும் குறிப்பிட்ட வட்டாரத்திற்கான மொழியாக அல்லாமல் அனைவருக்கும் புரியும்படியான பேச்சுத்தமிழ் ஒன்று வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அதாவது, வட்டார மொழி - பொதுப்பேச்சுத் தமிழ் - எழுத்து வழக்கு என்பதாக ஒரு வரிசை முறை அமைக்கப்பட வேண்டும். வட்டார வழக்குகளில் உள்ள சிறப்பான பல சொற்கள் இன்று வழக்கொழிந்து போயுள்ளன. வழக்குச் சொற்களையும் பொதுப்பேச்சுத் தமிழையும் உள்வாங்காமல் அமைக்கப்படும் பாடத் திட்டமும் இதற்கு ஒரு காரணம். குழந்தைகளின் மொழிவளம் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமானால் வழக்கில் உள்ளதன் நீட்சியாகப் பாட முறைமையும் அமைக்கப்படல் வேண்டும் என்பது இந்த ஆய்வின் வழி அறியப்பட்ட உண்மை.

*முதல் வகுப்பு தமிழ்ப் பாடநூல்*

குழந்தைகள் எழுத்தறிவைப் பெறுவதற்கு அடித்தளமாக அமைவது முதல்வகுப்பு. அவ்வகுப்பில் அறிமுகம் செய்யப்படும் பாடநூற்கள் மிகவும் சிரத்தையோடு உருவாக்கப்படவேண்டும். அந்த அடிப்படையில் முதல் வகுப்பு தமிழ் நூலின் உள்ளடக்கம் மட்டும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது.

முன்புபோல் உயிரெழுத்து, மெய்யெழுத்து என தொகைத்தொகையாக அல்லாமல் எழுத்துக்கள் வரிவடிவத்தின் அடிப்படையில் தற்போது அறிமுகம் செய்யப்படுகின்றன. குழந்தைகள் எழுதுவதற்கு ஏற்றது, எளிமையானது என முதலில் ட, ப, ம ஆகிய உயிர்மெய் எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இவற்றை அறிமுகம் செய்ய பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் மெய்யெழுத்துக்களும் இணைந்தே வருகின்றன. உதாரணமாக, ‘பட்பட், டம்டம்’ (*முதல் வகுப்புப் பாடநூல்*, ப. 20).

மேற்குறிப்பிட்ட இடத்தில் மட்டுமல்லாது, முதல் வகுப்பு பாடநூல் முழுவதும் உயிர் மற்றும் உயிர்மெய் எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்படுகின்றனவே தவிர, மெய்எழுத்துக்கள் முறையாக அறிமுகம் செய்யப்படவில்லை. “இதில் தனியாக அறிமுகம் செய்ய என்ன இருக்கிறது? புள்ளி வைத்தால் ‘ட்’, புள்ளி வைக்காவிட்டால் ‘ட’” என்று சிலர் சொல்லலாம். பெரியவர்களுக்குப் புள்ளி வைப்பதும் வைக்காததும் எளிமையான காரியமாகத் தெரியக்கூடும். ஆனால், எழுத்தை அப்பொழுதுதான் கற்க ஆரம்பித்திருக்கும் குழந்தைகளுக்குப் புள்ளி வைக்கப்பட்டதால் ஒரு எழுத்து, மற்றொன்றாக மாறிப்போவது குழப்பத்தை அல்லவா ஏற்படுத்தும்?!

‘கெ’ என்ற எழுத்து அறிமுகம் செய்யப்படாமலேயே படஅகராதியில் கொடுக்கப்பட்டுள்ளது (மேற்படி, ப. 82). இவைதவிர, வடமொழி எழுத்துக்களும் எவ்வித அறிமுகமும் இன்றி வாக்கியங்களுக்கு இடையில் கொடுக்கப்பட்டுள்ளன. வார்த்தைகளாகக் கூட அல்லாமல் வாக்கியங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இவற்றைக் குழந்தைகளால் எப்படி புரிந்து கொள்ள இயலும்? (*மேற்படி*, ப.62)

மொத்தம் 105 எழுத்துக்கள் மட்டுமே (வடமொழி எழுத்துக்கள் உட்பட) முறையாக அறிமுகம் செய்யப்படுகின்றன. இவை மட்டுமே போதுமானதாக உள்ள நிலையில் பாடப்புத்தகத்தின் கடைசியில் 247 எழுத்துக்களும் கட்டம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வகுப்புக் குழந்தைக்கு அத்தனை எழுத்துக்களின் வரிவடிவங்களும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் தானா?

புதிதாக அறிமுகம் செய்யப்படும் எழுத்து, “இதுதான்” என்பது சரியாகச் சுட்டிக்காட்டப்படவில்லை. அந்த எழுத்து பெரியதாகவோ வேறு எழுத்து முறையிலோ அல்லது வேறு வண்ணத்திலோ சரியாக அடையாளம்

காட்டப்படவில்லை. மற்ற எழுத்துக்களைப் போன்றே புதிய எழுத்தும் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

வரிவடிவத்தை அடிப்படையாகக் கொண்டு முதல்வகுப்புப் பாடநூலில் 27ஆம் பக்கம் வரை எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன (ட, ப, ம தொடங்கி ஞ, ண, ள வரை). பக்கம் 33 முதல் ஒலிப்புமுறையை அடிப்படையாகக் கொண்டு (அ, ஆ...) எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. வரிவடிவம் - ஒலிப்புமுறை என்ற இருபெரும் பிரிவுகளை மனதில் கொண்டு ஏதோ ஒரு வரிசைமுறையின் அடிப்படையில் எழுத்துக்கள் வரிசைபடுத்தப்பட்டுள்ளன. ஆனாலும் இவற்றின் இடையில் ஒரு தொடர்ச்சியின்மையைக் காணமுடிகிறது. இது இட்டுநிரப்பப்பட வேண்டியது அவசியம்.

முதல் வகுப்பு நூலில் ஒவ்வொரு பாடத்திற்கும் அதிகஅளவு செய்முறைப் பயிற்சிகள் உள்ளன. ஒவ்வொரு பக்கமும் எழுத்துக்களால் நிரம்பியுள்ளன. பாடங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள படங்கள் தெளிவில்லாமலும் குழந்தைகள் உலகத்தோடு ஒட்டாமல் அந்நியமானதாகவும் இருக்கின்றன. குறிப்பாக, நிறம், சுவை, ஒலி ஆகிய பாடங்கள்.

மாணவர்களே செய்து பார்ப்பது போன்று சில பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான வழிமுறைகள் நீண்ட தொடர்களில் குழந்தைகளால் படிக்க முடியாத அளவில் இருக்கின்றன. உதாரணமாக, 'விளையாடிக் கற்போம் - 1'ல் உள்ள 'நினைவில் கொள்வோம்' என்ற பயிற்சி (*மேற்படி*, ப. 31). ஐந்து வயதான குழந்தைக்கு, அதுவும் இப்போதுதான் எழுத்தைக் கற்க ஆரம்பித்திருக்கும் குழந்தையை நோக்கி சொல்லப்படும் இவைகள் பொருத்தமானவையாக இல்லை.

களஆய்வின் போது, "முதல் இரு வகுப்புகளுக்கு வரையறுக்கப்பட்ட பாடநூல்கள் தேவையில்லை. பாடங்களைக் குழந்தையின் ஆளுமையை, படைப்பாற்றலை வளர்த்தெடுக்குமாறு அமைத்துக் கொள்ளலாம். மாணவர்களைச் சிந்திக்க, கேள்வி கேட்கத் தூண்டும் வகையில் பாடங்கள் இருக்க வேண்டியது அவசியம்" என்று கூறிய ஆசிரியர்களின் கருத்து இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது.

# களம் தந்த செய்திகள்

தமிழ் மொழியைப் பயிற்றுவித்தலில் உள்ள சிக்கல்களை அறிந்து கொள்ளல் அவசியம் என்று கருதினோம். தொடக்கப்பள்ளி ஆசிரியர்களோடு கலந்துரையாடி, வகுப்புகள் நடத்தப்படும் போது மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை உற்றுநோக்கி ஆய்வு செய்தால் மட்டுமே அவற்றை சரியான முறையில் அடையாளம் காண முடியும் என்று எங்களுக்குத் தோன்றியது.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இவ்வாறு களஆய்வு மேற்கொள்ளுதல் என்பது இயலாத காரியம். எனவே, (பாண்டிச்சேரி உள்ளிட்ட) வடமாவட்டங்கள்; தஞ்சை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்கள்; கொங்கு மண்டலம்; மதுரை, சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்கள்; தென்மாவட்டங்கள் என்று தமிழகத்தை ஐந்து பகுதிகளாகப் பகுத்துக்கொண்டோம். ஒவ்வொரு பகுதிக்கும் பத்து பள்ளிகளில் (மெட்ரிகுலேஷன், தனியார், அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள்) களஆய்வு மேற்கொள்ளத் திட்டமிட்டோம். அதன்படி பள்ளிகளை நோக்கி எங்கள் பயணத்தைத் தொடங்கினோம்.

* முதல் மூன்று வகுப்புகளில் தமிழ்க் கற்பிக்கப்படும் முறைகள்

* மொழிப் பாடத்தைக் கற்பிப்பதில் ஏற்படும் சிக்கல்கள்

* படிப்பிற்கும் படைப்பாற்றலுக்கும் உள்ள உறவு நிலை

என்பன போன்ற நோக்கங்களோடு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களைச் சந்தித்தோம். அவர்களிடம் எங்களது நோக்கங்களைத் தெளிவுபடுத்தினோம். சில பள்ளிகளில் அனுமதி கிடைத்தது. பல பள்ளிகளில், 'இதற்கெல்லாம் நாங்கள் அனுமதிப்பது இல்லை' என்று திருப்பி அனுப்பப்பட்டோம். ஆனாலும் பல பள்ளிகளில் எங்களது முயற்சி தொடர்ந்தது. அதன் விளைவாக, நாங்கள் பகுத்துக் கொண்டதின் அடிப்படையில் தமிழகம் முழுவதிலும் 46 பள்ளிகளில் (பார்க்க: பின்னிணைப்பு 1) களஆய்வு செய்ய முடிந்தது.

பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று, ஆசிரியர்களிடம் கேள்விகள் கேட்டு (பார்க்க: பின்னிணைப்பு 2) உரையாடியும் பாடம் நடத்தப்படும் போது வகுப்பறை நிகழ்வுகளைக் கவனித்தும் தரவுகளைத் திரட்டினோம்.

'மொழிக்கல்வியின் தரம் சரியில்லை' என்று கூறுவதற்கு முன் கல்வி கற்பிக்கப்படும் சூழல், மாணவர்களின் வீட்டு பொருளாதாரச் சூழல், மாணவர்களின் கற்கும் திறன், பள்ளியின் அமைவிடம், இன்ன பிற புறச்சூழல் காரணங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

**வகுப்பறை வசதிகள் இல்லாமை**

நாங்கள் களஆய்வு மேற்கொண்ட பள்ளிகள் பலவற்றில் தொடக்க வகுப்புகள் அனைத்தும் ஒரே கட்டிடத்தில் நடத்தப்படுகின்றன. சில பள்ளிகளில் வகுப்புகளுக்கு இடையில் தற்காலிகத் தடுப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பல பள்ளிகளில் தடுப்புகளும் இல்லை. மேலும் பல பள்ளிகளுக்கு நிரந்தரமான கட்டிடங்களும் இல்லை.

பல வகுப்புகள் ஒரே கட்டிடத்தில் நடப்பதால் அனைத்து வகுப்புகளின் ஒலியும் ஒரு சிறிய இடத்திற்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கிறது. இந்த ஒலிச் சுழற்சியில் 'குழப்பம் ஏற்படாமல்' மாணவர்களும் ஆசிரியர்களும் செயல்பட்டுக் கொண்டிருப்பது, ஒரு ஆசிரியர் குறிப்பிட்டது போல் அதிசயமாகவே இருக்கிறது. படித்தவர்கள், மேற்படிப்பு படித்துக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் இந்த மாதிரியான சூழலில்தான் தொடக்கக் கல்வியை முடித்துவிட்டு வந்திருக்கிறார்கள். என்றாலும் இந்த நிலை தொடர்ந்து நீடிப்பது கவலைக்குரியதாக உள்ளது.

ஆசிரியர்கள், கலந்துரையாடலின் போது கூறும் பலவகை விளையாட்டுக்களையும் பயிற்றுமுறை உத்திகளையும் வகுப்பறையில் செயல்படுத்துவது இல்லை. போதிய இடவசதி இல்லாதது இதற்கு குறிப்பிடத்தக்கதொரு காரணம்.

**போதிய ஆசிரியர்கள் இல்லாமை**

அதிக மாணவர்கள் ஒரே வகுப்பில் இருப்பதும் ஒரே ஆசிரியர் இரண்டு, மூன்று வகுப்புகளை நடத்த வேண்டிய நிலையும் கற்பித்தலில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. மேலும், "போதிய வகுப்பறைகள் இல்லாதது ஒரு பக்கம் இருந்தாலும் சில வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு ஆசிரியர்களைக் குறைத்து விடுகின்றனர்" என்கின்றனர் ஆசிரியர்கள். நாற்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சார சட்டத்தால் ஆசிரியர் குறைப்பு

நடக்கிறது. மறுபுறம் பள்ளியில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் சேர்க்கை இன்னும் குறைந்து விடுகின்றது. இதைக் காரணம் காட்டி பள்ளிகளும் மூடப் படுகின்றன.

பல பள்ளிகளுக்கு நிரந்தரமாக ஓர் ஆசிரியர் கூட இல்லை என்பது இன்னொரு சோகம். வேறு பள்ளிகளிலிருந்து ஆசிரியர்கள் தற்காலிகமாக வந்து பாடங்களைச் சொல்லிக் கொடுத்துவிட்டுச் செல்கின்றனர். 'இதுபோன்ற நிலைகளே குழந்தைகளுக்குச் சரியான மொழிக்கல்வியைக் கொடுக்க முடியாமல் போவதற்குக் காரணங்களாக உள்ளன' என்பது பெரும்பாலான ஆசிரியர்களின் கருத்து. போதுமான ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களைத் தனித்தனியாகக் கவனித்து, கற்பிக்க இயலாமல் போகிறது. ஒன்று முதல் மூன்று வகுப்புகளை ஓர் ஆசிரியரும் நான்கு, ஐந்தாம் வகுப்புகளை மற்றொரு ஆசிரியரும் (இருவருள் ஒருவர் தலைமையாசிரியர்) பார்த்துக்கொள்ளும் நிலை, ஈராசிரியர் பள்ளிகளில் உள்ளது.

**ஓராசிரியர் பள்ளிகள்**

சில இடங்களில் ஒரு சிறிய கீற்றுக் கொட்டகையில் ஐந்து வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. அந்த ஐந்து வகுப்புகளையும் ஓர் ஆசிரியரே கவனித்துக்கொள்கிறார். அந்த ஆசிரியரும் அலுவலகப் பணியின் காரணமாகவோ, சொந்தப் பணி காரணமாகவோ விடுமுறை எடுத்தால், அன்று அப்பள்ளிக்கும் விடுமுறைதான். இத்தகைய ஓராசிரியர் பள்ளி ஆசிரியர்களோடு பேசியபோது, "இவ்வாறு ஐந்து வகுப்புகளையும் கவனித்துக் கொள்வது கஷ்டம்தான். ஆனால், அதற்கான பயிற்சியை ஆசிரியர் பயிற்சியின் போது எங்களுக்குக் கொடுக்கின்றனர்" என்று கூறுகின்றனர். 'சரி, கவனித்துக் கொள்ளுதல் சாத்தியமாகலாம். ஆனால், கற்பித்தல் சாத்தியமா?' என்றால் "மிகவும் கஷ்டம்" என்றே பதில் வருகின்றது. இத்தகையச் சூழலில் பயிலும் குழந்தைகள் எந்த அளவிற்கு சரியான எழுத்தறிவை, மொழிப் பயிற்சியைப் பெற முடியும்? என்பது கேள்வியாகவே உள்ளது.

கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாவட்டங் களிலேயே (உதாரணமாக, திருவண்ணாமலை, தர்மபுரி போன்றவை) ஓராசிரியர் பள்ளிகளும் அதிகம் உள்ளன.

"1970களில் வேலையில் இருந்தபோது நானும் ஓராசிரியர் பள்ளியில்தான் இருந்தேன். இவ்வாறான பள்ளிகளில் பாடங்கள் நடத்துவதைக் காட்டிலும் 'வரும்போது என்ன பார்த்த?', 'உங்க வீட்ல என்ன விசேஷம்?' என்று பொதுவாகத்தான் நிறைய பேச முடியும். வயதில் பெரிய மாணவர்களைக் கொண்டு குறைந்த வயதுடையவர்களுக்கு எழுதக் கற்பிப்போம்" என்கிறார் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவர். ஏறத்தாழமுப்பது ஆண்டுகளாகியும் இந்த நிலைமை மாறாதிருப்பதையும் இன்னும் மோசமடைந்திருப்பதையும் கவலையுடனேயே நாம் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

நாங்கள் களஆய்வு செய்த வரையில், பாண்டிச்சேரி தொடக்கப் பள்ளிகளில் இவ்வாறான நிலை பெரும்பாலும் இல்லை. தமிழகத் தொடக்கப் பள்ளிகளைக் காட்டிலும் சற்று மேம்பட்ட நிலையைப் புதுவைப் பகுதிகளில் காணமுடிந்தது. ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனி அறைகள் உள்ளன. ஒவ்வொரு அறையிலும் மின்விசிறி, மாணவர்களுக்கான இருக்கைகள் போடப்பட்டுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை அங்கேயும் காணப்படுகிறது என்றாலும் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டளவிற்கு இல்லை.

**மாணவர்களின் வாழ்வியற் சூழல்**

சில பிரச்சனைகள் எல்லா இடங்களுக்கும் பொதுவானவையாக இருந்தன. அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது, மாணவர்களின் குடும்பப் பொருளாதாரச் சிக்கல். பல மாணவர்கள் காலை உணவு சாப்பிடாமல் பள்ளிக்கு வருகின்றனர். "பிள்ளைங்க பாவம். சோர்வா இருக்கும். தூங்கித் தூங்கி விழும். பசியோடு என்ன படிக்க முடியும்? படிக்கறதும் மனசில தங்காது. என்னாலும் குழந்தைகளிடம் கோபப்பட முடியாது; மனம் வராது. எத்தனை குழந்தைகளுக்கு என்னால் சாப்பாடு வாங்கித்தர முடியும்?" என்று கேட்கிறார் தர்மபுரியைச் சேர்ந்த ஒரு ஆசிரியை.

பாண்டிச்சேரி பகுதிப் பள்ளிகளில் காலை உணவும் வழங்கப்படுகின்றது. "ராஜீவ்காந்தி காலை உணவுத் திட்டம்" அங்கு நடைமுறையில் உள்ளது. இதனால், அங்குள்ள மாணவர்களின் இத்தகைய நிலைமை சற்று சீராக இருக்கிறது.

**ஒழுங்குப் பிரச்சனைகள்**

இரவு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் பள்ளிகள் சட்டவிரோத காரியங்கள் நடக்கும் இடங்களாக மாறி விடுகின்றன. "எங்கள் பள்ளி இரவு குடிமகன்களின் இடமாகி விடுகிறது. வகுப்பறைகளின் பூட்டை உடைத்து நாற்காலி, பென்ஞ் போன்றவற்றைத் திருடிச் சென்று விடுகின்றனர். சனிக்கிழமை விடுமுறை என்றால் நிலைமை இன்னும் மோசம். "இரு நாட்கள் விடுமுறைக்குப் பின் திங்கட்கிழமை வரும்போது எந்த போலீஸ்டேஷனில் புகார் கொடுக்க வேண்டி வருமோ என்ற கவலையுடனேயே வருவேன்" என்கிறார் ஒரு தலைமை ஆசிரியை. மதுரை நகரின் மையப் பகுதியிலிருக்கும் ஒரு பள்ளியின் நிலை இது.

"எங்கள் பள்ளியில் வைத்துத்தான் குடிப்பதும் கூத்தடிப்பதும் நடக்கும். நாங்களும் சொல்லிச் சொல்லி பார்த்தோம். இறுதியில் குழந்தைகள் அனைவரையும் அழைத்துக்கொண்டு ஊர்வலம் போனாம். 'பள்ளியா? பாரா? என்று கோஷங்களும் போட்டோம். அதனால் நிலைமை இப்போது சற்றுப் பரவாயில்லை" என்கிறார் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்துப் பள்ளியின் தலைமையாசிரியர். இதுபோன்ற சில முயற்சிகளை ஆசிரியர்கள் அக்கறையோடு மேற்கொண்டு வருகின்றனர்.

**மலையகப் பள்ளிகள்**

சமவெளிப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களைவிட மலையின மாணவர்களுக்கான பள்ளிகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் இன்னும் கூடுதலானவை - வேறுவிதமானவை. ஜவ்வாது மலையில் ஆதிவாசிக் குழந்தைகள் படிக்கும், வனத்துறையினரால் நடத்தப்படும் இரு பள்ளிகளுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பள்ளிகளின் ஆசிரியர்கள் கூறியதாவது:

* இங்குப்படிப்பவர்களில் பெரும்பாலானோர் முதல் தலைமுறையினர்.

* வெளியாட்களுடன் பழகுவதில் தயக்கமும் கூச்சமும் பயமும் இவர்களுக்கு அதிகம்.

* குழந்தைகளைப் பயமின்றி பேச வைத்தலே எங்களது முதல் நோக்கம்.

* இக்குழந்தைகள் தாங்கள் வாழும் சூழலைப் பற்றி அதிகமாக அறிந்து வைத்துள்ளனர்.

* மற்ற குழந்தைகள் 5 வயதில் புரிந்து கொள்வதை இவர்கள் 7 வயதில்தான் புரிந்துகொள்கின்றனர்.

* முதல்வகுப்புக் குழந்தைகள் வீட்டில் பல்தேய்ப்பது இல்லை. அதனால், வந்தவுடன் அவர்களைப் பல் தேய்க்கச் சொல்கிறோம்.

(இந்தப் பள்ளிகளில் களப்பணிக்குச் சென்றபோது காலையில் குழந்தைகள் அனைவரும் பல்தேய்த்துக் கொண்டிருந்தனர்.)

**மாநிலத் தலைநகர் பள்ளிகள்**

மாநகர் சார்ந்து இயங்கும் பள்ளிகளின் கல்வித்தரம் பிற இடங்களைவிட கூடுதலாக இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு நாங்கள் களப்பணி மேற்கொண்டோம். மற்ற நகரங்களை ஒப்பிடும் போது சென்னையில் அதிலும் குறிப்பாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கற்றல் மற்றும் கற்பித்தல் தரம், விகிதாச்சார அடிப்படையில் குறைவாகவே உள்ளது. பிற நகரங்களில் உள்ளதைப் போல இங்கும் ஆசிரியர் பற்றாக்குறை, போதிய இடவசதி இல்லாமை ஆகியவை பிரச்சனைகளாகவே உள்ளன. 'குழந்தைகள் படிக்காதற்கு முக்கிய காரணம் பெற்றோர்கள் கவனிக்காததே' என்ற குற்றச்சாட்டை இங்குள்ள ஆசிரியர்கள் முன்வைத்தனர்.

நகரின் மையப் பகுதியில் உள்ள ஒரு பள்ளியில், "எங்கள் பள்ளிக்குச் சேரிப் பகுதியிலிருந்துதான் அதிக குழந்தைகள் வருகின்றனர். என்னதான் கற்பித்தாலும் அவர்களுக்கு ஏறுவதில்லை" என்றும் "நாங்கள், எங்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் சொல்லிக் கொடுப்பதைப் போல் அவர்களும் வீட்டில் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் படிக்கும்" என்றும் ஆசிரியைகள் தெரிவித்தனர். பெற்றோர்கள் மீதும் குழந்தைகள் மீதும் குற்றம் சாட்டும் வகையில் அமைந்த இப்பேச்சுக்கள் ஆசிரியர்களின் மனநிலையைப் புரிந்துகொள்ள உதவின. இப்பள்ளி தவிர வேறு இடங்களில் (சென்னை உட்பட) இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மொழிக்கல்வி குறித்து ஆசிரியர் கருத்து

## கற்றலின் இனிமை குறித்து

கற்றலின் இனிமை என்ற திட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு ஆடல், பாடல் ஆகியவற்றின் மூலம் கற்பிக்கும் போக்கு வளர்ந்துள்ளது. இவற்றின் வழி கற்பிக்கும்போது குழந்தைகள் எளிதாகக் கற்க வாய்ப்பு ஏற்படுகிறது. பாடல்களைப் பிரபலமான திரைப்பட மெட்டுகள், தொலைக்காட்சித் தொடர் மெட்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியும் பயிற்றுவிக்கின்றனர். இது தொடர்பாக ஆசிரியர்களிடம் கேட்டபோது இருவேறுவிதமான கருத்துக்களைத் தெரிவித்தனர். சிலர், "இப்படிக் கற்பிப்பதன் மூலம் குழந்தைகள் எளிதில் கவரப்படுகின்றனர், அதேநேரத்தில் கற்கவும் செய்கின்றனர்" என்றனர். வேறுசிலர், "குழந்தைகள் எளிதாகக் கவரப்படுகின்றனர் என்பது உண்மைதான். என்றாலும் இதில் மெட்டுக்கள் முதன்மையாகவும் பாடம், இரண்டாம் பட்சமாகவும், மாறிப்போகும் ஆபத்து இருக்கிறது. மேலும் விளையாட்டின் வழி கற்பிப்பது வெறும் விளையாட்டாகவே போய்விடும் வாய்ப்பும் உள்ளது." என்று கூறினர்.

"திரைப்படம், தொலைக்காட்சி போன்ற காட்சி ஊடகங்களை முற்றிலுமாக நிராகரிப்பதும் தேவையற்றது. உதாரணமாக மலை, கடல், அருவி போன்றவற்றைப் படஅட்டைகள் கொண்டு காட்டுவதைவிட மேற்சுட்டிய ஊடகங்களின் வழியாகத் திரைக்காட்சியாகக் காட்டும்போது அவை, குழந்தைகள் மனதில் ஆழப்பதிகின்றன. கற்பித்தலின் தேவையைப் பொறுத்து ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்வது நன்மை தரும். அவ்வாறல்லாமல் ஊடகங்களைப் பயன்படுத்துவது ஒன்றே குறிக்கோளாகி விடக்கூடாது" என்றும் தெரிவித்தனர். எவ்வாறாயினும் குழந்தைகளின் மனநிலைக்கேற்ப மகிழ்ச்சி-யாகக் கற்பிக்கப்படும் கல்வி அவர்களின் மனதில் ஆழமாகப் பதியும் என்பதை மறுப்பதற்கில்லை.

## வட்டார மொழிப் பயன்பாடு

மாணவர்களுக்குத் 'தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு' போதல்தான் சிறப்பாக இருக்கும் என்பது பல ஆசிரியர்கள் வலியுறுத்திய கருத்து. இவ்வகையில் பேச்சுமொழி, வட்டார மொழியைப் புறக்கணிக்காமல் அவற்றிலிருந்து தொடங்குவதுதான்

*பேச்சுத்தமிழ் குறித்த மேலும் சில கருத்துக்கள்*

* பேச்சுத் தமிழில் எழுதச் சொன்னால் தவறாக எழுதுகிறார்கள். மேலும் பேச்சுத் தமிழில் உள்ளதைப் படிக்க மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

* குழந்தைகளிடம் பேச்சுத் தமிழில் உள்ள கதையையோ பாடலையோ படிக்கக் கொடுத்தால் அதை எழுத்துத் தமிழாக மாற்றிப் படிக்கிறார்கள். காரணம், பேச்சுத்தமிழை வரிவடிவமாக அவர்கள் பார்க்கவில்லை. அதற்கான வசதிகளை நாம் உருவாக்கிக் கொடுக்கவில்லை.

* எழுத்தையும் பேச்சையும் இரு வேறு உலகமாக நம் மரபு பார்ப்பதனால் பேசுகின்ற மொழி, புத்தகத்தில் வரக்கூடாது என்பதில் மாணவர்கள் ரொம்பவும் கறாராக இருக்கின்றனர். ஆனால், எழுத்துத் தமிழை மட்டுமே பயன்படுத்துமிடத்து குழந்தைகளின் படைப்பாற்றல் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

* எழுத்துமொழி தெரிந்த பிறகுதான் பேச்சுமொழியை எழுதுதல் என்பது முடியும். காரணம், எழுதத் தெரிந்த பிறகுதான் 'இது எனக்கு நெருக்கமாக இல்லை' என்பதை உணர முடிகிறது. அவ்வாறல்லாமல் முதலிலேயே பேச்சுத் தமிழில் எழுதுவது என்பது குழப்பத்தையே ஏற்படுத்தும். ஆகவே, எழுத்துமொழியில் எழுதத்தெரிந்த பிறகு தான் இதைச் செய்யவேண்டும்.

* குழந்தைக்குச் சிறுவயதிலிருந்தே பேசுகிற மாதிரி எழுதுவது தவறில்லை என்பதையும் ஆனால், இதைச் சில இடங்களில்தான் செயல்படுத்த முடியும் என்பதையும் விளக்கி விடுவது நல்லது. குழந்தை, பேச்சுத் தமிழில் எழுதுவதை அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், அதுதான் அவர்களது படைப்பாற்றலை வளர்க்கிறது. மெல்லமெல்ல எழுத்துத் தமிழைக் கொண்டுவரவும் முயற்சிக்க வேண்டும்.

* இதற்கான முயற்சிகள் பரவலாக மேற்கொள்ளப்பட வேண்டும். இன்றைக்கு நாம் எழுதும் தமிழின் வடிவம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வடிவமல்ல. நாம் தொடர்ந்து இவ்வகையான முயற்சிகளை மேற்கொண்டால் எழுத்து மொழியின் வடிவமே மாற வாய்ப்பு இருக்கிறது.

* கிராமத்துக் குழந்தைகள் தொலைக்காட்சியைத் தவிர வேறு எங்கும் பொது மொழியைக் கேட்பதில்லை. பொதுவாகவே, பயண அனுபவங்கள் இல்லாதவர்களுக்குப் பொதுமொழி குறித்த அறிவு, குறைவாகத்தான் இருக்கும். வட்டாரமொழி வேறுபாடுகளையும் பேச்சுத் தமிழையும் 'சரி, தவறு' என்று பாகுபடுத்தி பார்க்காமல் பழக்கம், புரிதல் தொடர்பான விஷயங்களாகக் காட்டுவது நன்மை பயக்கும்.

* முதல் வகுப்பு முழுக்க வட்டார மொழியை மட்டுமே பயன்படுத்துவது நல்லது. ஒன்று, இரண்டாம் வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் அந்தந்த வட்டாரத்தைச் சார்ந்தவர்களாக இருப்பது நலம். பேச்சு வழக்குதான் தாய்மொழி என்று சொல்லலாம். அதிலிருந்து பொதுப் பேச்சுத் தமிழுக்கும் பிறகு எழுத்துத் தமிழுக்கும் மொழியை வளர்த்துக்கொண்டு போக வேண்டும்.

சிறப்பாக இருக்கும் என்ற கருத்தைப் பலரும் வலியுறுத்தினர். இருந்தாலும், "பாடங்களைப் பொதுமொழியில்தான் கற்பிக்க வேண்டும். வட்டாரத்திற்கு வட்டாரம் தமிழ் வேறுபடுகிறது என்பதால் பாடங்களைப் பொதுமொழியில் உருவாக்குதலே நல்லது; அப்பாடங்களை வகுப்பறையில் கற்பிக்கும்போது வட்டார மொழியில் விளக்கம் தரலாம்" என்று சிலர் குறிப்பிட்டனர்.

**எழுத்து**

'எழுத்துக்களை அடையாளம் காணவே மாணவர்களுக்கு ஓர் ஆண்டு (முதல் வகுப்பு) முழுவதும் தேவைப்படுகின்றது. இரண்டாம் வகுப்பில்தான் அவர்களால் ஓரளவு எழுத முடிகிறது. முதலிரண்டு வகுப்புகளுக்கு 247 எழுத்துக்கள் சுமையாகவே உள்ளன. மேலும் வடமொழி எழுத்துக்கள், மூன்று வரி வடிவங்கள் இணைந்து ஒரே எழுத்தாக வருமிடங்கள் (கௌ, சோ, போ) ற, ர; ன, ண, ந; ல, ள, ழ போன்ற எழுத்துக்களை மாணவர்கள் பிழையாக எழுதுகிறார்கள். அதிக எழுத்துக்களைக் கற்பதே இதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. ஆகவே, எழுத்துக்களைத் தொடக்க வகுப்புகளில் குறைத்துக் கற்பிக்கலாம்' என்பது ஆசிரியர்களின் பொதுவான கருத்து. 'பாடங்களைக் குறைக்கலாம்' என்பது கிராமப்புற பள்ளிகளில் பணிபுரியும் பெரும்பாலான ஆசிரியர்களின் கருத்தாக இருந்தது.

**மொழியைப் பயிற்றுவிக்கும் போது**

'பாடத்திட்டத் திட்டத்தின் அடிப்படையில்தான் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றது. எழுத்துப் பயிற்சியும் அவ்வாறே அளிக்கப்படுகின்றது' என்று ஏறக்குறைய எல்லா ஆசிரியர்களும் கூறினர். என்றாலும் நடைமுறை சிக்கல்களையும் சுட்டிக் காட்டினர்.

"மொழிப்பாடத்தைக் கற்பித்தல் என்பது தொடர்ந்து நடைபெற வேண்டியது. முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளைப் பள்ளிச் சூழலுக்குக் கொண்டு வரவே ஆறுமாதங்களாகி விடுகின்றன. ஆகவே, முதல் வகுப்புக் குழந்தைகளுக்குத் தேர்வு வைத்து சோதிப்பது தேவையற்றது; மூன்றாம் வகுப்பு வரை

குழந்தைகளைப் பேச, வாசிக்க வைக்க வேண்டுமே ஒழிய தேர்வு தேவையற்றது. முதல் வகுப்பில் முதல் மூன்று மாதங்கள் வாய்மொழிப் பயிற்சி மட்டும் கொடுத்தால் போதும் என்று கூறும் அரசு, காலாண்டுத் தேர்வுக்கு அச்சடிக்கப்பட்ட கேள்வித்தாளை அனுப்புகிறது" என்ற குற்றச்சாட்டை ஆசிரியர்கள் எழுப்பினர்.

குழந்தைகள், கருத்தைப் புரிந்து கொண்டு கற்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். கிளிப்பிள்ளை போல் மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் தவிர்க்கப்பட வேண்டும். ஒன்று, இரண்டாம் வகுப்புக் குழந்தைகள் காதால் கேட்டதைப் புரிந்துகொண்டு பதில் சொல்வது(நாப்பயிற்சிப் பாடல்கள், திரும்பச் சொல்லச் செய்தல் போன்ற ஊத்திகளின் வழி) தானாகக் கதை சொல்வது, கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வது, புதிய புதிய சொற்களைத் தினமும் கேட்டறிவது, எழுத்துக்களை அடையாளம் காண்பது, கரும்பலகையிலோ அல்லது 'போஸ்டர்'களிலோ எழுதி வைக்கப்பட்டுள்ள கதையை ஆசிரியரது உதவியுடன் உரத்து வாசிப்பது ஆகியனவற்றை மட்டுமே தெரிந்து கொண்டாலும் போதும். அதைத்தான் இவ்வகுப்புகளில் செய்யவும் முடியும் என்பது பல ஆசிரியர்களிடம் விவாதித்தபோது தெரிய வந்தது.

# மொழிக்கல்வி குறித்து கல்வியியலாளர்களின் கருத்துக்கள்

*(மொழியியல் அறிஞர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் மாற்றுக் கல்வி ஆர்வலர்கள் ஆகியோரின் கருத்துக்களைப் பரவலாக்கும் நோக்கோடு அவர்களைச் சந்தித்து உரையாடினோம். மேலும் "தொடக்க வகுப்புகளில் தமிழ்க் கற்பித்தல்" என்ற பொருளில் நாங்கள் ஏற்பாடு செய்திருந்த பயிலரங்குகளுக்கு* வந்திருந்தும் அவர்கள் உரையாற்றினர். நேர்காணல், உரைகள் வழி பதிவு செய்யப்பட்ட அவர்களின் கருத்துக்களைக் கீழே தொகுத்து அளித்துள்ளோம்.)*

## எது குழந்தை மொழி?

பேரா. தொ. பரமசிவன்

மொழிக் கல்வியைப் பொருத்த மட்டிலே பள்ளிக்கு வரும்போதே குழந்தை, பேசத்தெரிந்த குழந்தையாகத்தான் வருகின்றது. அதனுடைய மூளைக்குள்ளே சொல்தொகுதிகள் இருக்கின்றன. பள்ளிக்கு வருகிற போது பிள்ளைகள் அறிந்திருக்கிற சொற்களின் அளவு, நகர்ப்புறத்தை விட கிராமப்புறங்களில் அதிகமாகவும் கிராமப்புறங்களிலும் கூட, வசதியான வீட்டுப் பிள்ளைகளை விட பொருளாதார வசதி குறைவான வீட்டுப் பிள்ளைகளின் சொல்தொகுதி அதிகமாகவும் இருக்கிறது என்பது நடைமுறை உண்மை.

ஆனால், இந்தச் சொல்தொகுதி எல்லாம் இப்போதுள்ள பாடத்திட்டத்திற்குள்ளே வந்துள்ளதா? மொழியைப் பொருத்த மட்டிலே, பள்ளிக்கு வருவதற்கு முன்பே பிள்ளை, கதை கேட்க ஆரம்பித்து விடுகிறது. பாட்டுப் பாட ஆரம்பித்து விடுகிறது. இசையினுடைய பங்கு அதிகமாக உள்ளது. இது போன்று குழந்தைகளுக்குச் செய்யத் தெரிந்த விஷயங்களை வளர்த்தெடுக்கிற முறையிலே நாம் போதித்திருக்கிறோமா?

எனக்கு 'அ'னா கற்றுக்கொடுத்த போது, ராகம் போட்டுத்தான் சொல்லித் தந்தார்கள். பன்னிரெண்டு உயிர் எழுத்துக்களையும் பாடலாக அவர்கள் கற்றுத்தருகிற போது, அதிலே வரிசை மாறாது. ஒரு திரைப்படப் பாடலைக் கற்கிற குழந்தை, கிட்டத்தட்ட அறுபது - எழுபது சொற்கள் அடங்கிய பத்து

---

* *(முதல் பயிலரங்கு, பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்துடன் இணைந்து 2003 ஆகஸ்ட் 23, 24ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. இரண்டாவது பயிலரங்கு, திருச்சி க்ரியா குழந்தைகள் பள்ளியுடன் இணைந்து 2004 பிப்ரவரி 7, 8 தேதிகளில் நடத்தப்பட்டது.)*

வரிகளை அப்படியே சொல்கிறது. ஆனால், 'அ'னா, 'ஆ'வன்னாவைச் சொல்லச் சொன்னால் அது குழம்புகிறது. ஏன்? இசையோடு அந்த விஷயத்தைக் கற்பிக்க வேண்டும். நம்முடைய மொழிக்கும் இசைக்கும் உரிய முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டால், இந்த மொழியினுடைய ஒலித்திரள்கள் இசையோடு கட்டமைக்கப்பட்டவை. மூன்று மாத்திரையிலே, தமிழிலே ஒரு எழுத்து கிடையாது என்பது தமிழினுடைய அடிப்படை. 'அ' ஒரு மாத்திரை. 'ஆ' வன்னா இரண்டு மாத்திரை. 'ஆ...' என்று நீட்டிச் சொல்லிவிட்டால் அங்கே மொழி இசைபடுகிறது என்று சொல்கிறார்கள் தமிழ் இலக்கணிகள். 'ம்ம்ம் ...' என்று சொன்னால் அது இயல் தமிழ் அல்ல. இசைத் தமிழின் கூறு சேர்ந்து விடுகிறது என்கிறார்கள்.

மனித உடம்பும் மனித நரம்பும் மனித உயிர்ப்பும் இசையோடு பின்னப்பட்டதினாலேயே, இசையில்லாமல் 'அ, ஆ, இ, ஈ ...' என்று கற்றுக்கொடுக்கிற போது, ஒலித்திரள்களைக் கற்றுக்கொள்ள இயலாத நிலைக்குக் குழந்தை போகிறது. அது மட்டுமல்ல, பாரம்பரியமான- மனித உடம்போடும் உயிரோடும் பின்னப்பட்ட - இசை உணர்வையும் அது இழந்து போய் விடுகிறது. இந்த நுட்பமான வேர்களைக் குழந்தைகளின் மனதிலிருந்து நாம் அறுத்து விடுகிறோம். மொத்தத்தில் குழந்தைகளின் உலகம் இசை உலகம், பாட்டுலகம். இவற்றோடு சேர்ந்து, குழந்தைகளுக்குக் கற்பித்தல் அவசியம். இப்போக்கு நம்மிடையே குறைவு. வானொலியில் செய்தி வாசிப்பது போல் ஒரே குரலில் பாடம் நடத்தினால் குழந்தை எப்படி ஆர்வத்தோடு கற்கும்? குழந்தைகளின் பேச்சுமொழி ஏற்ற இறக்கத்தோடு கூடியது. உயிர்ப்போடு உள்ள ஒரு மொழி. ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் போது அது செத்த மொழியாக இருக்கக் கூடாது. நான் தொடக்கப் பள்ளியில் படித்து இத்தனை ஆண்டுகள் ஆனாலும் இன்றும் அந்தப் பாடங்களை என்னால் சொல்ல முடியும். அதே போல, எனக்கு நன்றாக நினைவிருக்கிறது ஐந்தாம் வகுப்பிலே வியாகப்பன் என்றொரு ஆசிரியர் இருந்தார். முக்கூடற்பள்ளிலே உள்ள பாட்டை, பாடித்தான் சொல்லித் தருவார்.

ஆற்றுவெள்ளம் நாளை வரத் தேற்றுதே குறி
மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே

கேணி நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே

இந்தப் பாட்டுக்குள்ளே என்ன இருக்கிறது? உங்கள் மண் சார்ந்த குறிப்பாக, நெல்லை மண் சார்ந்த (அந்த இலக்கியம் நெல்லையில் பிறந்தது.) 'ஈகோ சிஸ்டம்' என்ன என்பதை அந்தப் பாட்டு கற்றுத்தருகிறது.

நம்மையறியாமலேயே, உணவு சாப்பிடுகிற போது எப்படி நாம் உயிருக்குத் தேவையான ஒன்றைச் சாப்பிடுகிறோம் என்ற தன்னுணர்வு இல்லாமலே சாப்பிடுகிறோமோ அதுபோல இந்தப் பாட்டைக் கற்கிற போது, இந்த மண்ணினுடைய 'ஈகோ சிஸ்டம்' என்ன, இந்த மண்ணின் பருவ காலம் எப்படி அமையும்? நாளை மழை வரும் என்றால் இன்றைக்கு 'ஈகோ சிஸ்டம்' என்னவாக இருக்கும்? கிணற்றில் தவளைக் கூப்பிடும்: 'சேற்றில் நண்டு சேற்றில் வளை ஏற்றடைக்குதே, மழை தேடி ஒரு கோடிவானம் பாடி ஆடுதே'ன்னு வரும். இன்றைக்கும் அதுதான்.

இங்கே பாரம்பரியமான தொழில் நுட்ப அறிவு புதைந்து கிடக்கிறது. அதாவது, செய்துசெய்து பழக்கப்பட்டு, மண்ணிலிருந்தும் பிற உயிர்களிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் நாம் பெறக் கூடிய இந்த அறிவுத் தொகுதி இது, சின்னக் குழந்தைக்கு ஏதேனும் ஒரு வகையில் தரப்பட வேண்டும். பாட்டாகவோ, விளையாட்டாகவோ... களிமண்ணில் பொம்மை செய்த நினைவெல்லாம் எனக்கு இருக்கிறது. கப்பல் செய்யவும் கத்திக் கப்பல் செய்யவும் சொல்லித் தருவார்கள். முடிச்சுப் போடக் கற்றுக் கொடுப்பார்கள். மானிடவியல் படித்தவர்களுக்குத் தெரியும், முடிச்சுப் போடக் கற்றுக் கொண்டதால் 'மனித இனத்தினுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் என்ன?' என்பது. செய்துசெய்து பழக்கப்பட்ட இந்த செய்முறைப் பயிற்சி சார்ந்த ஐந்தாம் வகுப்பிற்குக் கீழான நூல்கள் எல்லாம், கொஞ்சம் கொஞ்சமாக மாற்றப்பட்டு எதுவரைப் போனதென்றால் - ஒரு கட்டத்தில் அ, ஆ விற்குப் பதிலாக, படம் பட்டம் என்று 'ட'னா எழுத்து முறைகளைக் கற்றுக்கொடுத்தார்கள் - இன்றைக்கும் அப்படியேதான் கற்றுக்கொடுக்கிறார்கள்.

குழந்தைகளின் விரல்களுக்குத் தகுந்த 'பென்சி'லோ 'பேனா'வோ இன்னும் நம்மிடையே இல்லை. 'சிலேட்டு, குச்சி குழந்தைகளின் விரல்களுக்குத் தகுந்தவை. நாம் பயன்படுத்துகிற

'பால்பாயிண்ட் பேனா'வைத்தான், ஒன்றாம் வகுப்புக் குழந்தையும் பயன்படுத்துகிறது. அவை, குழந்தைகளின் விரல்களுக்கு ஏற்றவையல்ல. குழந்தைகளுக்குத் தகுந்தாற் போன்று மேலைநாடுகளிலிருக்கிற 'பேனா'க்கள் கனம் குறைந்தவையாக இருக்கின்றன. பிடித்து எழுதுவதற்கு கருவியின் வளர்ச்சியும் அவசியம் என்பதால் சொல்ல வருகிறேன். நாங்கள் படிக்கிற போதெல்லாம் குச்சிதான். நான்காம் வகுப்பு வரும்போது தான் 'பென்சில்' தருவார்கள். மூன்றாம் வகுப்புவரை எழுதுகருவி, குச்சியாகத்தான் இருந்திருக்கிறது. அதாவது, விரல்களின் கனத்திற்குத் தகுந்தாற் போன்ற எழுதுகருவி. வயசானால்தான் கனமான 'பேனா'க்கள் தேவைப்படுகின்றன. குழந்தைகளின் சின்னக் கைகளுக்கு ஏற்ற எழுதுகருவிகள் தேவை. வளைவுகள் தான் குழந்தைகளின் விரல்களுக்குப் பழக்கப்பட வேண்டுமே தவிர கோடுகள் அல்ல. 'அ'னா, 'ஆ'வன்னாதான் குழந்தைகளுக்கு முதலில் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோல, வட்டார வேறுபாடுகளோடு சேர்ந்த ஒரு மொழிக்கல்வி வேண்டும். என்னுடைய பாடப்புத்தகத்திலே நான் 'கிணறு'தான் பாத்திருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இதே சொல்தான். 'கேணி'யே கிடையாது. நூலைப் பார்த்து வடமாவட்டக் குழந்தைகள் திணறியிருக்கும் என்பது இப்போது எனக்குத் தெரிகிறது. ஏனென்றால், அங்கே கேணி என்ற சொல்தான் உண்டு, கிணறு என்ற சொல் கிடையாது. மதுரை தாண்டி திண்டுக்கல் பக்கம் போகும் போதுதான் கிணறு, கேணி என்ற இரு சொற்களும் இருக்கின்றன. இரண்டிற்கும் நுட்பமான வேறுபாடு உண்டு. பொருள் வேறுபாடு இல்லாமல் ஒரு சொல் தோன்றாது. இந்த இரண்டு சொற்களும் கலப்பது திண்டுக்கல் பகுதி. என்னுடைய வீட்டிலே ஒரு திண்டுக்கல்காரர் குடிவந்தார். அவர், கேணி என்று சொன்ன போது என் அம்மாவுக்கு விளங்கவில்லை.

ஆகவே, வட்டார வேறுபாடுகளை உள்ளடக்கிய ஒரு மொழி அவசியம். ஏனென்றால், அந்த வட்டாரம் இல்லாமல் அந்த மனிதன் இல்லை. வட்டார வேறுபாடுகளை முற்றாக நிராகரித்து ஒரு பொது மொழியைக் கற்கும் நிலைமை பள்ளிக் குழந்தைகளுக்கு வரக்கூடாது. உதாரணமாக, கோவை மாவட்டம் என்றால் பருத்தி, ஈரப்பதம் உள்ள காற்று போன்ற அறிமுகத்திற்குப் பிறகுதான் அந்தக் குழந்தைக்கு மதுரையைப்

பற்றிய அறிமுகம் வரவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

அதேசமயம் பேச்சு வழக்கில் உள்ள வட்டார வேறுபாடுகளை அப்படியே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால், அவர்களின் அனுபவம் வட்டாரம் சார்ந்து சுருங்கிவிடும் அபாயமும் உண்டு. வேறுபாடுகளை உள்ளடக்கிக் கொண்டு ஒரு பொது மொழியை உருவாக்கிக் கொள்வதுதான் நியாயமாக இருக்கும். குழந்தைமொழி என்பது குழந்தைகளின் அனுபவ எல்லையைப் பொருத்தது. அவர்களின் அனுபவ எல்லை மிகவும் சுருக்கமானது. வட்டார மொழியையும் மற்ற புறநிலை மொழிகளையும் எடுத்துக்கொண்டுதான் ஒரு பொது மொழியை உருவாக்க வேண்டும். பன்னிரெண்டு - பதினாறு சொற்கள் உள்ள வாக்கியங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்காமல், “அவர் படிக்கிறார்” “இவர் குளிக்கிறார்” என்பது போன்று இரண்டு, மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியங்களைக் கொடுக்கும் போது சிக்கல் ஏற்படுவது குறையும்.

நேற்று இருந்த ஆசிரியர்களை விட, இன்றைக்கு இருக்கிற ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகிற சவால்கள், குறிப்பாகக் குழந்தைக்கு மொழியைக் கற்பிப்பவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களில் மிக முக்கியமான ஒன்று, காட்சி ஊடகங்களின் வலிமை. நாம் சொல்லிக் கொடுக்கின்ற ஒன்றை, தொலைக்காட்சியிலே பிழையாக எழுதிப்போடுகிறார்கள். குழந்தை அதை நம்புமா? நம்மை நம்புமா? குழந்தைகளுக்கு நாம் சொல்வதைக் காட்டிலும் வலிமையாகச் சொல்லக்கூடிய சாதனமாகத் தொலைக்காட்சி உள்ளது இல்லையா? இம்மாதிரியான சவால்கள் எனக்கு மொழி கற்பித்த ஆசிரியருக்கு இல்லை. இப்போதுள்ள ஆசிரியருக்கு இந்த சவால் உள்ளது. இவ்வகையான சவால்களை எதிர்கொள்கிற முறை தெரிய வேண்டும்.

விளம்பரங்கள் அனைத்தும் கறுப்புப்பணத்தின் வெளிப்பாடு. அதாவது, கறுப்புப்பணம் சேர்ப்பதற்குரிய செயற்பாடு. விளம்பரங்களின் அமைப்பு நமக்கு எதிரானது என நான் நினைக்கிறேன். செயற்கையான ஒலி, செயற்கையான உச்சரிப்பு... ‘குங்குமம்’ என்று அவர்கள் உச்சரிக்கும்போதே... இது யாருக்கானது? பாடம் பயிற்றுவித்தலில் மாற்றம் தேவைதான். அதை எவற்றின் மூலம் கொடுக்கிறோம் என்பதில் கவனம்

வேண்டும். உத்தி மட்டுமே குழந்தைகளின் மனதில் ஆழப் பதிந்துவிடும் அபாயம் உள்ளது. நம்முடைய பேச்சுமொழி ஒலிநயம் மிகுந்தது. அப்படி ஒரு மொழிநடையை உருவாக்க வேண்டும். விளம்பரம், பாடல்கள் குழந்தைகளை ஈர்ப்பதற்கு முக்கியக் காரணம் ஒலிநயம். இசையில்லாத விளம்பரம் இல்லை. அதனால்தான், குழந்தைகள் அந்த மாயவலையில் சிக்குகிறார்கள். குழந்தைகளைப் பலியாடுகளாக ஆக்கிவிடக் கூடாது.

வட்டாரம் சார்ந்த வழக்குகள் இருப்பது போன்று சாதி சார்ந்த வழக்குகளும் உள்ளன. அந்தச் சாதி சார்ந்த வழக்குகளில் உள்ள சிறந்த கூறுகள் எவை எனக் கண்டறிய வேண்டும். அவற்றிலும் குழந்தையின் சொல்தொகுதி சார்ந்த விஷயங்கள் இருக்கின்றன. ஒரு தச்சர் வீட்டுக் குழந்தைப் படிக்க வரும்போது, அந்தக் குழந்தைக்குத் தச்சு வேலை செய்கிற கருவிகளுடைய வகைப்பாடும் அவற்றினுடைய பெயர்களும் தெரிந்திருக்கும். 'இது சுத்தியல், இது ஆப்பு, இது ஆப்புக்கு வைக்கிற உளி - ஆப்புளி, இது கொட்டாப்புளி, இது இழைப்பு' என்று இந்த மாதிரியான கருவி அறிமுகமும் அவற்றினுடைய பெயர் அறிமுகமும் அவற்றினுடைய பயன்பாடும் அக்குழந்தைக்குத் தெரிந்திருக்கும். உழவர் வீட்டுக் குழந்தைக்கு உழவு சார்ந்த சொற்களும் அந்தக் கருவிகளின் பெயர்களும் தெரிந்திருக்கும். இவ்வாறாக, இரண்டையும் கலக்க வைக்கக் கூடிய பாடத்திட்டம் தேவைப்படுகிறது.

குழந்தைகளுக்குச் சொல் ஒலியோடு அந்தப் பொருளும் காட்டப்பட வேண்டியது மிகவும் அவசியம். எனக்கே மிகவும் வியப்பாக இருந்தது. என்னவென்றால், என் மகளோடு பணியாற்றுகின்ற ஒரு பெண், 'என்னால் நெற்பயிரையோ தக்காளிச் செடியையோ அடையாளம் காட்ட முடியாது' என்று சொன்னாளாம். எவ்வளவு பெரிய கொடுமையான விஷயம்! இங்கே (நெல்லையில்) கண் தெரியாதோர் பள்ளியில் ஒன்று, இரண்டு வகுப்புகளுக்கு வெள்ளைத் துணியில் முடிந்து ஒரு பொருளைக் கொடுப்பார்கள். அந்த மாணவர்கள் அதைத் தடவிப் பார்த்து வெங்காயம் என்றோ சீரகம், கடுகு என்றோ நுட்பமாகப் பார்த்துச் சொல்வார்கள். கண் தெரியாத பிள்ளைகள் இந்த மாதிரிப் படிப்பால் பேறுபெற்றவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

குழந்தைகளிடையே வழக்கில் உள்ள சொற்கள் பொதுமொழியில் இல்லை. உதாரணமாக, பாண்டி விளையாட்டில் 'அவுட்' என்பதற்கு 'சப்பை' என்பார்கள். விளையாடும் கருவியின் பெயர் வட்டக்கு. இந்த இரண்டு சொற்களும் பாடநூலில் இல்லை என்பது மட்டுமல்ல, அகராதிகளிலும் கிடையாது. பாடம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான நிகண்டுகள் அதாவது, "குழந்தைமொழி அகராதி" என்றே ஒன்றைப் போட வேண்டும். வட்டார வேறுபாட்டையும் சாதி வேறுபாட்டையும் உள்ளடக்கிய மொழி, பதிவு செய்யப்பட வேண்டும். குழந்தைகள் வாசிக்க வாசிக்க பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்குமான இடைவெளி குறைந்துவிடும்.

# தொடக்க வகுப்புகளில் தமிழ் மொழியைப் பயிற்றுவித்தல்

திருமிகு ச. தமிழ்ச்செல்வன்

## குழந்தைகளை அணுகுவது குறித்து

குழந்தைகளிடம் இயல்பாகவே படைப்பாற்றல் திறன் இருக்கிறது. அதை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். ஆசிரியர்களாக இருந்து குழந்தைகளைப் பார்த்தால் அதைச் செய்ய முடியாது. நாமும் குழந்தைகளாக மாற வேண்டும். பெரியவர்களாகிய நமக்குப் பேசவே தெரியவில்லை. குழந்தையைப் பார்த்தவுடன் "எத்தனையாவது வகுப்புப் படிக்கிறே?"ன்னு முதல் கேள்வி கேப்பாங்க. அதுவே தப்பு. பெற்றோர்களும் 'மாமாவுக்கு பாடிக் காட்டு, ஆடிக் காட்டு' என்று சொல்லி, வித்தை காட்டுபவர்களாக நடந்து கொள்கின்றனர். குழந்தைகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் பழக வேண்டும். குழந்தைகளோடு பழகுவது அவ்வளவு சுலபமான வேலை அல்ல.

நான், ஒரு நண்பர் வீட்டுக்கு, அவருடைய குழந்தையுடன் விளையாடலாம் என்று போனேன். அது, அவ்வளவு சுலபத்தில் என்னுடன் விளையாட ஒப்புக்கொள்ளவில்லை. அதனுடன் பேசிப் பேசி ஒரு வழியாக விளையாடத் தொடங்கினோம். முதலில் சாக்பீசில் ஒரு வட்டம் போட்டு, "இது என்ன?" என்றேன். அந்தக் குழந்தையின் அம்மா தள்ளி நின்று கொண்டு, "காலையில சாப்பிட்டோமே!" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். அந்தக் குழந்தை என் கையிலிருந்து சாக்பீசை வாங்கிக்கொண்டு, அந்த வட்டத்தை ஒரு இடத்தில் அழித்து அந்த இடத்தில் வளைத்துவிட்டு, அதன்மேல் ஒரு கோட்டையும் (காம்பு) போட்டு, "இது ஆப்பிள்" என்று சொன்னது. இன்னொரு வட்டம் போட்டேன். அந்த வட்டத்தையும் மாற்றி "உருளைக்கிழங்கு" என்று சொன்னது. இப்படி வட்டம் போட்டுக்கொண்டே இருந்தேன். அந்தக் குழந்தை 32 பொருட்களைச் சொன்னது. கடைசி வரை தோசையைச் சொல்லவில்லை.

குழந்தைகள் படைக்கிறார்கள் என்றால் அதை ஊக்குவிக்க வேண்டும். ஒரு குழந்தை கவிதை எழுதியிருந்தது:

கரும்பலகை என்பது
ஒரு
பெரிய சிலேட்.

இது போன்ற விஷயங்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகளிடமிருந்து கற்றுக்கொண்டால்தான் நாம் கற்பிக்க முடியும். குழந்தைகளிடம் பேசுவதற்கான முறையே வேறு. அதற்கான முகபாவனை நமக்கு வேண்டும். வித்தியாசமான செய்கைகள் நமக்கு இருக்க வேண்டும். "இந்தியத் தொலைக்காட்சிகளில் முதன்முறையாக" என்று வித்தியாசமாக உச்சரிக்கும் போது குழந்தைகள் கவனிப்பார்கள்.

**கற்பித்தல் தொடர்பாக**

வகுப்பறையின் சூழலையே மாற்ற வேண்டியுள்ளது. ஆசிரியர் கற்றுக்கொடுப்பவராகப் போதல் கூடாது. குழந்தைகளோடு சேர்ந்து கற்பவராக இருக்க வேண்டும். வகுப்பறை என்பதே இல்லாமல் கூட பள்ளிகள் இருக்கின்றன. அதற்கெல்லாம் என்ன செய்வதென்று நாம் யோசிக்க வேண்டும். குழந்தைகளின் சிந்தனை முறைமைக்கு ஏற்ப பாடங்கள் அமைக்கப்படல் வேண்டும். காட்சிப்பூர்வமாக உள்ளதா? உணர்வுரீதியாக உள்ளதா? என்பதைக் கவனித்தல் மிகவும் முக்கியம்.

குழந்தைகளுக்கு ஒன்றும் தெரியாது என்ற மனநிலையில் இருந்து பாடம் நடத்துகிறார்கள். குழந்தைகளுக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக்கொண்டு ஆசிரியர்கள் பாடம் நடத்த வேண்டும். குழந்தைகள் வெற்று 'பாட்டில்'கள் என்று நினைத்துத்தான் எல்லாப் பாடங்களையும் உருவாக்குகிறார்கள். அவற்றை நிரப்புவதாகவே ஆசிரியர்கள் நினைத்துக் கொள்கின்றனர். பாடத்திட்டத்தில் உள்ளது தவிர மற்ற விஷயங்கள் தேவையில்லை என்ற கருத்து இருப்பதை கவனிக்க வேண்டும். பல்வேறு விஷயங்களைச் செய்யக்கூடிய அளவில் பாடத்திட்டம் அமைக்கப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக, " 'அ'வில் முப்பது வார்த்தைகளை அறிமுகம் செய்யவும்" என்று விட்டுவிட வேண்டும். அதைப் பூர்த்தி செய்வது ஆசிரியர்களும் மாணவர்களுமாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்களிடையே கலந்து பேசிக்கொள்ளும் தன்மையை உருவாக்க வேண்டும். பெரிய வகுப்புகள் எடுக்கும் ஆசிரியர்களும் தொடக்க வகுப்பு ஆசிரியர்களும் மாணவர்களின்

தரம், தாங்கள் பயிற்றுவித்த முறைமைகள் குறித்து கலந்து பேசிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் குழந்தைகளின் நிலையைச் சரியாகப் புரிந்துகொண்டு பாடங்களை நடத்த முடியும்.

ஆசிரியர்கள் குழந்தைகளை மதிக்க வேண்டும். குழந்தைகள் சொல்வதைக் கேட்கின்ற ஆசிரியர்களாக மாற வேண்டும். நட்பு ரீதியாக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். கல்வியை மகிழ்வாக மாற்ற வேண்டுமானால் அதைத் தெருவோடும் வீட்டோடும் ஊரோடும் இணைக்க வேண்டும். அதோடு பெற்றோர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். உச்சரிப்புப் பயிற்சி போன்றவற்றைப் பெற்றோர்களுக்கு அளித்தல் அவசியம். குழந்தைகள் நன்றாகப் பேச இது உதவும். பெற்றோர்களை மொழிப்பயிற்சிக்கு வரவழைத்தல் வேண்டும். பெற்றோர்களிடம் மொழி மீதான பொறுப்புணர்வை உருவாக்க வேண்டும்.

கற்பித்தல் முறை என்பது ஒவ்வொரு மாவட்டம் சார்ந்தும் வேறுபட வேண்டும். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சாதிய ரீதியாகவும் வேறுபாடுகள் உள்ளன. ஆசிரியர்கள் குழந்தைகளோடு இருப்பதைக் கடமையாக, வேலையாக எண்ணாமல் சந்தோஷமாக நினைத்து அனுபவிக்க வேண்டும். அப்போதுதான் ஆசிரியப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். குழந்தைகள் பள்ளியில் மட்டுமல்லாது பல இடங்களிலும் மொழியைக் கற்றுக்கொள்கிறார்கள். தெருக்களில், வீடுகளில், விளையாடும் போது என்று பல இடங்களில் மொழியைக் கற்றுக்கொள்கின்றனர்.

நான் என்னுடைய பையனுக்குத் தோசை சுட்டுக் கொடுப்பேன். அவன் பெயர் சித்தார்த்தன். 'சி' என்று ஒரு தோசை, 'த்'ன்னாவில் புள்ளிக்கு ஒரு தோசை என்று சுட்டுக் கொடுப்பேன். ஒவ்வொரு எழுத்தாகக் கேட்பான். அவனுடைய டீச்சர் 'மாலதி' பெயரில் தோசை கேட்பான். அதனால், 'டீச்சிங் எயிட்ஸி'ல் தோசையைச் சேர்த்து விடலாம். வட்டமாகத்தான் தோசையை, இட்டிலியைச் சுட வேண்டும் என்ற நியதி எங்கே இருக்கிறது? விதியை மீற வேண்டும். மீறினால், கற்பனை வளரும். குழந்தைகளோடு பணியாற்றுகிற ஆசிரியர்களாகிய நாம், ஒவ்வொரு நிமிஷமும் எல்லைகளை, சட்டங்களை மீறிக்கொண்டே இருக்க வேண்டும்.

உணவையே விளையாட்டுப் பொருளாக மாற்ற வேண்டும். பல குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களே இல்லையே...

கற்பித்தல் எனும் போது ஆசிரியர்களின் பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது. கற்றுக்கொடுத்தல் என்பதும் கற்றுக்கொள்ளுதல் என்பதும் வகுப்பறையில் மட்டும் நிகழக் கூடியதில்லை. குழந்தைகள் விளையாடக் கூடிய இடத்திற்கு ஆசிரியர்கள் செல்ல வேண்டும். அதாவது, சாயங்கால நேரங்களில் ஆசிரியர்களும் கூட சேர்ந்து விளையாடலாம். அந்த விளையாட்டிலே நல்ல தமிழ் வார்த்தைகளைச் சேர்த்துவிடலாம். பள்ளியில் விளையாடு வதற்கென்று சில விளையாட்டுக்களைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒன்று, இரண்டாம் வகுப்புகளில் பார்த்தல், கேட்டல், விரல் பழக்கம் ஆகியன வேண்டும்.

வகுப்பறையில் குறிப்பிட்ட உயரம் வரையும் கறுப்பு வண்ணத்தைத் தீட்டி வைக்க வேண்டும். குழந்தைகள் கிறுக்குவதற்கு அனுமதிக்க வேண்டும். இது அவர்களுடைய எழுத்துப் பயிற்சிக்கு அடிப்படையாக இருக்கும். ஒரு வருஷம் முழுவதும் கூட இது போன்ற கிறுக்குவதற்கான பயிற்சியைக் கொடுக்கலாம்.

புத்தகங்களிலிருந்து படங்களை நகலெடுத்து, பெரிதுபடுத்தி, வண்ணத் தாள்களை வாங்கி வண்ணம் தீட்டி அதைக் குழந்தைகளுக்குப் பயிற்சிக்காகப் பயன்படுத்தலாம். ஒன்று, இரண்டாம் வகுப்பு குழந்தைகளுக்கான பாடப் புத்தகங்களை 'போஸ்டர்' புத்தகங்களாக மாற்ற வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு 'போஸ்டர்' செய்ய வேண்டும். நடித்துக் காட்டச் சொல்லுதல் - போலச் செய்யச் சொல்லுதல் - இவற்றின் மூலம் மொழியை வளர்க்க முயலலாம்.

குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதுதல் மிகவும் முக்கியமான ஒரு விஷயம். ஒவ்வொரு ஆசிரியரும் அவரவர் வகுப்புக்கான பாடல்களை அவரவர்களே தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். அந்தந்த வட்டாரம் சார்ந்த சொற்களை வைத்துக்கொண்டு, ஆசிரியர்கள் 'அ'னா, 'ஆ'வன்னாவிற்கான பாடலை எழுதிக் கற்பிக்க வேண்டும். ஆசிரியர்கள் திறமை மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். நிறைய படிக்க வேண்டும். கவிதை விளையாட்டுக்களையும் செய்யலாம். குழந்தைகள் படம்

வரைந்து கொண்டே கதை சொல்வார்கள். அது போன்ற கதை சொல்லும் வடிவத்தையும் அறிமுகப்படுத்தலாம். பட்டிமன்றம் கூட நடத்தலாம். 'ரெட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?' என்பது பற்றி கூடப் பேசலாம்.

குழந்தைகள் எல்லோருமே அறிவுள்ளவர்கள்தான். சில குழந்தைகளுக்குச் சில திறன்கள் குறைவாக இருக்கும். அந்தத் திறன்களை மேம்படுத்த வழிமுறைகளை ஆசிரியர்கள் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற சிறப்புக் கவனிப்புக்களின் மூலம் திறன் குறைந்த குழந்தைகளையும் ஐந்தாறு மாதத்தில் மற்றவர்களோடு சமமாகக் கொண்டு வந்துவிட முடியும்.

**மொழிப்பாடம் குறித்து**

இலக்கணமொழிதான் தமிழ் என்று இல்லாமல், வட்டாரம் சார்ந்த மொழிகளில் உள்ள வீரியமான சொற்களையும் உள்வாங்கியதாக மொழிப்பாடம் அமைதல் வேண்டும்.

எங்களுக்கெல்லாம் 'ஆத்தா'தான் தெரியும். "அம்மா இங்கே வா வா"ன்னு டீச்சர் சொன்னவுடனே நா(ன்) கேட்ட கேள்வி, "அம்மான்னா யாரு டீச்சர்?"ன்னுதான். டீச்சர் சொன்னாங்க "அம்மான்னா ஆத்தாடா"ன்னு. எங்க வீடுகளில் ஆத்தான்னுதான் கூப்பிடுவோம். எங்க ஊர் நாயக்கமார் வீடுகளில்தான் அம்மான்னு கூப்பிடுவாங்க. அப்ப நான் நினைச்சுக்கிட்டேன் 'சரி, இது நாயக்கமார் எழுதிய புத்தகம் போல'ன்னு.

பிழைதிருத்தம் ஒரு கட்டம் வரை தேவையில்லை என்று தான் நினைக்கிறேன். மற்றொன்று, வகுப்பறையில் வைத்துத்தான் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தல் கூடாது. வீடுகளும் தெருக்களும் தமிழ்க் கற்கும் இடங்களாக மாற வேண்டும். அதற்கான வழிமுறைகள் என்ன என்பதை யோசிக்க வேண்டும்.

'அ'னா, 'ஆ'வன்னாவிற்குக் கண்டிப்பாகப் பாட்டு இருக்க வேண்டும். 'அம்மா இங்கே வா வா ...', பாட்டே இப்போது காணவில்லை. வார்த்தைகளை அறிமுகப்படுத்தும் போது அவர்களுக்கு அறிமுகமானவற்றையே கொடுக்க வேண்டும். 'உலகிலே' ("எனக்குக் கிடைத்த பொம்மை போல் எதுவும்

இல்லை உலகிலே" - பார்க்க: முதல் வகுப்பு பாடநூல், ப.1) என்பது போன்ற வார்த்தைகள் தேவையற்றவை. ஊரில் உள்ள வார்த்தைகள், குடும்ப வார்த்தைகள், சாதிய வார்த்தைகள் இவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள், அம்மாவைப் போல் இருக்க வேண்டும்.

அனுபவம் உள்ள ஆசிரியர்கள், குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதாகப் பாடங்கள் அமைதல் வேண்டும். நம்முடைய பாடமுறைமைத் தலைகீழாக உள்ளது. தமிழ்க் கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்த ஒரு கருத்தரங்கை நாம் ஏற்பாடு செய்தல் வேண்டும். அதில் குழந்தைகளும் இருத்தல் வேண்டும்.

கிராமத்துக் குழந்தைகளுக்குத் தெருக்களில் எழுத்துக்களே கிடையாது. நகரத்துக் குழந்தைகளுக்கு எங்கு பார்த்தாலும் எழுத்துக்கள் உள்ளன. இதுபோன்ற ஒரு நிலை, கிராமங்களில் தேர்தலின் போதுதான் ஏற்படுகிறது. தேர்தலால் இது ஒரு நன்மையே. எழுத்துக்கள் குழந்தைகள் கண்ணில் படும் சூழலை உருவாக்குதல் குறித்தும் நாம் யோசிக்க வேண்டும். தொலைக்காட்சியில் ஓடும் எழுத்துக்கள் வந்துள்ளன. அதைக் கூட ஒரு பயிற்சியாகப் பயன்படுத்தலாம்.

முதியோர் கல்வித் திட்டத்தில், பயிலுநர்களை வாழ்க்கையிலிருந்து வார்த்தைக்குக் கூட்டிப்போக வேண்டியுள்ளது. குழந்தைகள் அப்படி அல்ல. குழந்தைகளுக்கு வாழ்க்கைத் தெரியாது. எனவே, வார்த்தைகளைத்தான் அறிமுகப்படுத்த வேண்டும். இந்த வார்த்தைகளும் ஐந்து முதல் ஏழு வயது வரை அவர்களுக்கான வாழ்க்கையிலிருந்து சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கு வாழ்க்கையையும் வார்த்தையையும் இணைத்துச் சொல்லிக்கொடுக்க வேண்டியுள்ளது. தமிழ் மொழியை எழுதுவதற்குப் "படங்கள் பார்த்து கதை சொல்லுதல்" போன்ற வகையில் பயிற்சிப் புத்தகங்களை உருவாக்கலாம். புதிய புதிய கதைகள் கொடுக்க வேண்டும். காக்கா கதை, நான்கு எருது கதையை எல்லாம் மாற்ற வேண்டும்.

நாங்கள், 'மக்கள் வாசிப்பு இயக்கம்' ஒன்றை நடத்தினோம். இதில் பயில்பவர்களைக் கொண்டே புத்தகங்களைத் தயாரித்தோம். பயிற்சிப் புத்தகம் உட்பட யார் படிக்கிறார்களோ அவர்களை வைத்துக்கொண்டே, அவர்களின் பங்களிப்போடே

நாங்கள் புத்தகங்களை உருவாக்கினோம். அதுபோல குழந்தைகளோடு சேர்ந்து அவர்களுக்கான புத்தகங்களைத் தயாரிக்கலாம். இது சாத்தியமா, இல்லையா? என்பதைச் செய்து பார்த்த பிறகுதான் சொல்ல வேண்டும்.

குழந்தைகளுக்கான நூல்கள் எவை என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். நாங்கள் அறிவொளி இயக்கத்தில் வயது வந்தவர்களுக்காக அறுபது கதைப் புத்தகங்களைப் போட்டோம். பின்னர் அதைத் தொகுத்து இருபது புத்தகங்களாகவும் போட்டுள்ளோம். அதையெல்லாம் வாங்கிப் பயன்படுத்தலாம். மாணவர்களிடம் நூலகத்திற்குப் போகும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

ஆங்கிலவழிப் பாடப்புத்தகம் வேறாகவும் தமிழ்வழிப் பாடப்புத்தகம் வேறாகவும் இருக்கிறது. ஆங்கிலவழிக் குழந்தைகளுக்கு பூமி ஒரு தட்டின் மீது மிதந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிய பாடம் இருக்கிறது. தமிழில் இல்லை. தகவல் ரீதியான இத்தகைய இடைவெளிகள் நீக்கப்பட வேண்டியது அவசியம்.

பொதுத்தமிழ் என்பது அவசியம்தான். எந்த வயதில் குழந்தைகளுக்கு அதை அறிமுகப்படுத்துவது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டும். வட்டாரத் தமிழைப் பொதுத்தமிழ் உள்வாங்க வேண்டும்.

**மொழிப்பாடத்திற்கான பயிற்சிகள்**

ஒன்றாம் இரண்டாம் வகுப்பில் கேட்டல், பேசுதல் பயிற்சி கொடுக்கலாம். மூன்றாம் வகுப்பில் வாசித்தல் பயிற்சிக்குப் போகலாம். படக்கதைகளைப் பயன்படுத்திக் கற்பிக்கலாம். முதியோர் கல்வியில் 'யாருக்கு எது தேவை?' என்று ஒரு பாடம். படம் இருக்கும், அதற்கான வார்த்தையைப் பயிலுநர்கள் எழுத வேண்டும். உதாரணமாக, ஒருவரின் காலில் முள் குத்தியிருப்பது போல ஒரு படம் இருக்கும். அந்தப் படத்துக்குக் கீழே 'இவருக்கு என்ன தேவை ?' என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கும். 'செருப்பு' என்று பதில் எழுதலாம். மழை பெய்து கொண்டிருப்பது போல படம் இருக்கும். அந்தப் படத்திற்குக் கீழே 'குடை' என்று எழுதலாம். இது போன்ற பயிற்சிகளை மூன்றாம் வகுப்பில் கொடுக்கலாம்.

குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்ப்பதற்கான பயிற்சிகளை நாம் உருவாக்க வேண்டும். வார்த்தை விளையாட்டுக்கள், கதை விளையாட்டுக்கள் போன்றவற்றைக் கொடுக்கலாம். சினிமாப் பெயர் சொல்லும் விளையாட்டுக்கள் உண்டு. அதை நாம் வேறுவிதமாக விளையாடலாம். இரு குழுவாகப் பிரிந்து, 'க' என்ற எழுத்தை ஒரு குழுவினர் சொல்ல அந்த எழுத்தைத் தொடக்கமாகக் கொண்ட ஒரு வார்த்தையை அடுத்த குழுவினர் சொல்ல வேண்டும். உதாரணமாக, க-ட்-டி-ட-ம் - ஐந்து எழுத்து - ஐந்து 'மார்க்'. மற்ற குழு வேறு எழுத்தைத் தொடங்க, முதல் குழுவினர் பதில் சொல்வார்கள். இது போன்ற விளையாட்டுக்களை விளையாடலாம். பெரிய வார்த்தைகளைச் சொன்னால் அதிக 'மார்க்' கிடைக்கும்.

இதேபோன்று வாக்கிய விளையாட்டுக்களையும் விளையாடலாம். ஒருவர் ஒரு வாக்கியம் சொல்ல, ஒவ்வொருவரும் ஒரு வார்த்தையைச் சேர்த்து அந்த வாக்கியத்தைப் பெரிதாக்க வேண்டும். உதாரணமாக:

நான் கடைக்குப் போனேன்.
நான் நடந்து கடைக்குப் போனேன்.
நான் நடந்து காய்கறி வாங்க கடைக்குப் போனேன்.
நான் நடந்து கையில் பையுடன் காய்கறி வாங்க
கடைக்குப் போனேன்.

இப்படி....

ஒரு ஆண்டு தொடங்குவதற்கு முன்னால், ஒவ்வொரு பள்ளியின் ஆசிரியர்களும் ஒன்று கூடி ஒரு பயிற்சிப்பட்டறை நடத்த வேண்டும். அப்பட்டறையில் அவர்கள் அந்த ஆண்டுக்கான பயிற்சி உபகரணங்களைத் தயாரித்துவிட வேண்டும். வாசித்தலில், 1. மௌனமாக வாசித்தல் 2. உரத்து வாசித்தல் என்று இருவகை உண்டு. குழந்தைகளுக்கு உரத்து வாசிப்பதற்கு ஏற்றமாதிரியான கதைகளை உருவாக்க வேண்டும். அவ்வகைக் கதைகளில் சிறு சிறு வாக்கியங்கள் அமைதல் வேண்டும்.

குழந்தைகளை உரக்க வாசிக்கச் செய்து வாசிப்பை, உச்சரிப்பை சரிசெய்தல் வேண்டும். குழந்தைகளுக்குச் சத்தமிட்டு பேசுவதற்கான குரல் பயிற்சியும் அவசியம். தினமும் காலை குழந்தைகளுக்குக் குரல் பயிற்சி கொடுக்கலாம். வார்த்தைகளை உச்சரிப்பதிலிருந்து தொடங்குவது சுலபமாக இருக்கும் என

நினைக்கிறேன். 'அம்மா' என்றால் அ-ம்-மா என்று எழுத்துக்களாக உச்சரிக்கப் பழக்க வேண்டும். அதன் பிறகு, வரிவடிவத்திற்கு வரலாம். வார்த்தைகளை இப்படிப் பிரித்துச் சொல்லலாம் என்பது குழந்தைகளுக்குத் தெரிந்தால் எழுதுவது எளிதாக வரும் என நினைக்கிறேன்.

நாடகப் பயிற்சியின் போது கொடுக்கப்படும் பயிற்சிகளை வகுப்பறையில் பயன்படுத்தலாம். எழுத்துப் பயிற்சியின் போது இரண்டு வரி, நான்கு வரி நோட்டுக்களைப் பயன்படுத்தலாம். எழுத்தின் மேல் எழுதுதல், கேட்டு எழுதுதல் போன்ற எழுத்துப் பயிற்சிகளைக் கொடுக்கலாம். இப்பயிற்சியைக் கற்பனையோடு எப்படி செய்ய முடியும் என்பதை நாம் யோசித்து செய்ய வேண்டும்.

# குழந்தைகளும் கற்பனையும்

முனைவர் தருமராஜ், முனைவர் கோ. பழனி

பாட்டி சொன்ன கதைகளைச் சரியாக நினைவில் வைத்து கதை சொல்லும் ஆற்றல் குழந்தைகளிடம் உண்டு. கதையின் 'ருசி' குழந்தைகளுக்குத் தெரியும். 'இது கதையில்லை', 'இது கதை' என்பதைக் குழந்தை கண்டுபிடித்து விடுகிறது. கதையில் யாரும் சாகக் கூடாது என்பது குழந்தைக் கதைகளின் நியதி. அப்படியே செத்தாலும் வேறொரு உலகத்தில் உயிர்பெறுவதாகக் கதை அமையும்.

அதிர்ச்சி தரக்கூடிய சம்பவங்களை முடிவுகளாகச் சொன்னால் நாம் எதிர்பார்க்கும் அதிர்ச்சி குழந்தைகளிடமிருந்து வராது. குழந்தைகளின் உலகத்தில் அதிர்ச்சி வேறு. 'பூப்பூவாப் பூத்திருக்கு'ன்னா அதில் ஒரு அதிர்ச்சி உண்டு. குழந்தைகளின் உலகத்தை நாட்டார் கதைகள் அப்படியே பதிவு செய்து வைத்துள்ளன. கதைகளில் அந்த உலகம் திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கிறது.

நாட்டார் கதைகளில் உள்ள கற்பனை வளத்தை, குழந்தைகளின் பயிற்றுவித்தலுக்குப் பயன்படுத்தலாம். விநோதமான கற்பனையெல்லாம் நாட்டார் கதைகளில் உண்டு. பெண் பூவாக மாறி விடுவது, துண்டு துண்டாக வெட்டி வீசப்பட்ட உடல் ஒன்றாக இணைந்து உயிர்பெறுவது போன்ற கற்பனைகள் குழந்தைக் கதைகளில் உண்டு. இந்த மாதிரியான கற்பனை வளத்தை நாம் அனுமதிக்க வேண்டும். தவறு, சரி என்ற வரையறையை மீறினால்தான் கற்பனை வளரும்.

புதிய கல்விமுறை என்ன சொல்லித் தந்திருக்கிறது? எது உண்மை என்றால் 'கதை இல்லாதது உண்மை' என்று சொல்லித் தந்திருக்கிறது. அறிவியல் எது என்றால் புனைவிற்கு - பொய்க்கு எதிரானதுதான் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறது. நம்முடைய மரபே கதை சார்ந்ததுதான். நம் வரலாறே கற்பனையான கதைகள் மூலம்தான் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. குழந்தைகள் எழுத்துணர்ந்த பிறவிகள் அல்ல. பேசத் தெரிந்த பிறவிகள். வாய்மொழி மரபை எப்படிப் பாதுகாக்கிறோமோ அப்படித்தான் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டும்.

குழந்தைகளின் உலகம் பொருட்கள் சார்ந்த உலகம் என்பதை மறத்தல் கூடாது. வரைபடக் கதைகளைக் குழந்தைகள் மிகவும் அற்புதமாகப் பதிவு செய்து வைத்துள்ளனர். இதில் எண்களையும் வெவ்வேறு விதமான பொருட்களையும் வரையும் தன்மை கொண்டவர்களாகக் குழந்தைகள் உள்ளதை அறியலாம்.

தந்திரமும் அறிவுரையும் இல்லாத கதைகள்தான் குழந்தைகளுக்குத் தேவை. இப்போதெல்லாம் குழந்தைகளைக் கதை சொல்லச் சொன்னால், அவர்கள் 'நீதிபோதனை'களைத்தான் சொல்கிறார்கள். 'எது' அல்லது 'யார்' அவர்களுக்கு இதைக் கற்றுக் கொடுத்தது? அவர்களின் கற்பனையில் குண்டு போட்டது யார்? கற்பனையே இல்லாத ஒரு மனப்பதிவு குழந்தைகளுக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. குழந்தைகள் தங்களது உலகத்தைத் தொலைத்து விட்டார்கள்.

நாடகப் பட்டறையில் அளிக்கப்படும் ஒரு பயிற்சி, ஒரு பொருளை வேறொன்றாகப் பயன்படுத்துதல். இதைக் குழந்தைகள் அற்புதமாகச் செய்வார்கள். ஒரு பொருளை ஒன்றிலிருந்து, இன்னொன்றாக ஒரு குழந்தை எளிதில் மாறிவிடுகிறது. கற்பனைத் திறன், குழந்தைகளுக்கு இயல்பாக இருக்கிறது.

சென்னையில் உள்ள ஆல்காட் பள்ளி மாணவர்களிடையே நாங்கள் நாடகப் பயிற்சிப் பட்டறை நடத்தினோம். முதலில் குழந்தைகள் நீதி போதனைக் கதைகளைத்தான் சொன்னார்கள். அவர்களின் கற்பனையைத் தூண்டி விட்ட பிறகு, விண்வெளியிலிருந்து வேற்று மொழி (ஷிஷி மொழி) பேசும் இருவர் வந்தார்கள். பாரதியார், எம்.ஜி.ஆர்., அரசியல்வாதி, 'போலீஸ்' என்று பலர் அவர்களைச் சந்திப்பதாகக் கதை நீண்டது. கற்பனை மனிதர்களைக் கொண்டு வந்து சமகால மனிதர்களோடு உலவ விட்டனர். இரண்டிற்குமான உறவை உருவாக்கினர். வயதில் மூத்த கலைஞர்களை விட, சிறப்பாகக் குழந்தைகள் அக்கதையை மேடையில் நிகழ்த்திக் காட்டினார்கள்.

'நான் சென்று கொண்டிருந்தேன்' என்று வசனம் பேசச் சொன்னால், "ராஜா வேஷமா?"ன்னு குழந்தைகள் கேட்பார்கள். இந்த மொழியே, பழங்காலத்து மொழியாகக் அவர்களுக்குப் படுகிறது. வகுப்பில் இந்தப் பிரச்சனை வருவதில்லையா?

"என்ன நீங்க, ராஜா காலத்து மொழியப் பேசிகிட்டிருக்கீங்களே?"ன்னு கேட்டிருக்காங்களா?

ஆசிரியப் பணி, குழந்தைகளோடு குழந்தைகளாக மாறிச் செய்யப்பட வேண்டியது. வீட்டில் அம்மாவிடம் நன்றாகப் பேசும் குழந்தை, வகுப்பில் கட்டுண்டு போகிறது. உங்க வீட்டில் இருக்கும் குழந்தை, எப்போதாவது ஒரே இடத்தில் இருந்ததைப் பார்த்திருக்கீங்களா? இருக்காது. குழந்தையின் இயல்பே அதுதான். பாடத்திட்டத்தை ஒரு பக்கம் வைத்து விட்டு, வீட்டுச் சூழலை வகுப்பறையிலும் உருவாக்கிக் கற்பித்தல் அவசியம். நாம் பெரியவர்களாகி விட்டோம் என்றாலும் மனரீதியாகக் குழந்தைகளின் வளர்ச்சியை நாம் எட்ட வேண்டி உள்ளது.

# தமிழ் மொழிக் கல்வி: விவாதப்புள்ளிகளும் கருத்துக்களும்

(களஆய்வின் போதும் இரண்டு பயிலரங்குகளின் போதும் நாங்கள் முன்வைத்த சில விவாதப்புள்ளிகளை இந்தப் பகுதியில் தருகிறோம். இவை பரவலாக எடுத்துச் செல்லப்பட வேண்டியவை.)

1. குழந்தைகளுக்கான மொழிக்கல்வியில் பேச்சு மொழியின் பங்கு அவசியமா?

* குழந்தைகளுக்கான கல்விமொழி பொது மொழியா? பேச்சு மொழியா?

* குழந்தைகளுக்கு, மொழியின் மீது ஆர்வத்தையும் அவர்களின் கற்பனை வளத்தையும் வளர்த்தெடுக்க எதிலிருந்து தொடங்குவது நல்லது? வட்டார மொழியினூடாகப் பொது மொழிக்குச் செல்லலாமா?

* பேச்சுக்கும் எழுத்திற்குமான இடைவெளியை எவ்வாறு நிரப்புவது?

2. சூழல் சார்ந்த மொழிக்கல்வி தேவையா?

* சூழல் சார்ந்த கல்விக்குரிய உள்ளடக்கம் எப்படி அமைக்கப்பட வேண்டும்? இயற்கை, ஊர், கதைகள், நம்பிக்கைகள், தொழில்கள், விழாக்கள் என விரிவது சரியா?

* சூழலுடன் பிரிக்க முடியாத அளவிற்கு உள்ள சாதிய, பால் வேறுபாடுகளை எப்படி கையாளுவது?

3. குழந்தைகளுக்கான மொழிக் கல்வியில் இலக்கியத்திற்கு இடம் உண்டா?

* தொன்மையான இலக்கியங்களின் அறிமுகம் குழந்தைகளுக்குத் தேவையா?

* நீதி சொல்வது, அறிவுரை கூறுவது போன்ற பாடங்களின் அவசியம் என்ன? இவற்றைத் தவிர்த்து விட்டால் என்ன ஆகும்?

* குழந்தையின் கற்பனை வளத்தை வளர்த்தெடுப்பது போன்ற பொதுவான பாடங்களை இணைக்கலாமா?

* நாட்டார் பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள்,

விளையாட்டுக்கள் போன்றவற்றைச் சொல்லிக் கொடுக்கலாமா?

* குழந்தைக் கவிஞர்களின் சிறந்த பாடல்களைக் கற்பிக்கலாமா?

4. நவீன ஊடகங்களின் மொழியும் குழந்தைகளுக்கான மொழிக் கல்வியும்

* செய்தித்தாள், இதழ்களில் வெளிவரும் செய்திகளைப் பயன் படுத்தி மொழியைக் கற்பிக்கலாமா?

* தொலைக்காட்சி போன்ற காட்சி ஊடகங்களை மொழிக் கல்விக்கு எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது?

* வானொலி, ஒலிப்பேழைகள் போன்றவற்றையும் மொழியைப் பயிற்றுவிக்கப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

* சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள், அறிவிப்புப் பலகைகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மொழியினூடாகக் குழந்தைகள் மொழியைக் கற்கும் வாய்ப்பைஏற்படுத்தலாமா?

மேற்சுட்டிய விவாதப்புள்ளிகளுக்கு நேரடியான பதில்களை ஆசிரியர்கள் தெரிவிக்கவில்லை. மொழிக்கல்விக்குரிய பயிற்று முறைகளினூடாகத் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

**பார்த்தல்**

குழந்தைகளை நேரடியாக அழைத்துச் சென்று காண்பித்தல் என்பது மிகுந்த பயனைக் கொடுக்கிறது. சுவர் விளம்பரம், சுவரொட்டிகள் போன்ற அமைப்பை வகுப்பறையில் பயன்படுத்தலாம். தினந்தினமோ, வாரத்திற்கு ஒரு சுவரொட்டியையோ குழந்தைகள் கண்ணில்படும் படியாக ஒட்டி வைக்கலாம். அது நல்ல பலனைத் தரும். சிறந்த விளம்பரங்களையும் குழந்தைகளின் எழுத்துப் பயிற்சிக்காகப் பயன்படுத்லாம். கல், குச்சி போன்றவற்றையும் பயன்படுத்தி எழுத்துக்களையும் சொற்களையும் உருவாக்கலாம். அட்டைகளில் எழுத்துக்களை உருவாக்கி குழந்தைகளைத் தொட்டு உணரச் செய்ய வேண்டும். கடினமான வார்த்தைகளை அட்டைகளில் எழுதி வகுப்பறையில் தொங்கவிடலாம். அவை குழந்தைகள் மனதில் பதியும். முதல் மூன்று வகுப்புகள் வரை ஒவ்வொரு மொழிப்பாடத்திற்கும் துணைக்கருவிகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

**கேட்டல்**

ஒலிச்சூழலில் வளர்கின்ற குழந்தையை நிசப்தம் பயமுறுத்துவதாக இருக்கின்றது. அதனால்தான் பள்ளிக்கு வந்த உடன் குழந்தை பயப்படுகிறது. உடலியக்கத்துடன் இணைத்து பாட்லைக் கற்றுக்கொடுக்கும் போது, குழந்தைக்குக் கற்றுக் கொள்ளுதல் எளிதாக இருக்கிறது. இலந்தைக்குளம் என்ற கிராமத்தில் உள்ள கழியலாட்டக் கலைஞர் ஒருவர், கழியல் பாட்டாக 'அ'னா, 'ஆ'வன்னாவைக் கற்றுக் கொடுக்கிறார். இதே போல 216 உயிர்மெய் எழுத்துக்களையும் கற்பிக்கலாம்.

ஒலி + உடலியக்கம் + அரங்கத் தன்மை மூன்றையும் இணைத்து கற்பித்தல். குழந்தைகளுடைய எல்லா விளையாட்டுக்களிலும் இருவகையான அரங்கக் கூறுகள் இருப்பதைக் காணலாம். 1. பாத்திரப் படைப்பு (கள்ளன் போலீஸ்). 2. உரையாடல் (ஒரு குடந் தண்ணி ஊத்தி...). தாளத்தில் அழுத்தம் இருந்தால்தான் அது குழந்தைகள் மனதில் பதியும்.

பாடல், நடிப்பு, கதை ஆகியவற்றின் மூலம் மொழிப்பாடத்தை நடத்த வேண்டும். பாடநூலில் உள்ள திருக்குறள் போன்ற மரபான இலக்கியப் பாடல்களைத் தெருக்கூத்து, நாடகம் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் பாடல் மெட்டுக்களைப் பயன்படுத்தி குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கலாம். தமிழ்ப் பாடல்களை இசைப்பாடல்களாகக் கொடுக்கும் போது குழந்தைகள் மனதில் ஆழப்பதிகின்றன. குழந்தைகள் முன்னால் ஆசிரியர்கள் ஆடிப்பாடிக் கற்றுக்கொடுக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

நாட்டார் பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள் போன்றவை கட்டாயமாக வகுப்பறைகளிலேயே சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் குழந்தைக்கு வகுப்பறை ஒரு அன்னியமான இடமாகத் தெரியாமல், தான் வாழும் வாழ்க்கையினுடைய நீட்சி என்பது தெரியும். நல்ல குழந்தைப் பாடல்களைத் தெரிவு செய்து, மெட்டுக்கள் அமைத்து குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். அப் பாடல்கள், குழந்தைகளுக்கு அறிமுகமான சொற்கள் உள்ள எளிய பாடல்களாக இருத்தல் அவசியம்.

குழந்தைகளுக்கான பாடல்கள் அடங்கிய ஒலிப் பேழைகளைக்

ஆயத்தப் பயிற்சிக்குப் பயன்படுத்தினால் சிறப்பான பலன் கிடைக்கும். நல்ல உச்சரிப்புப் பயிற்சியும் இது போன்ற ஒலிப்பேழைகளின் வாயிலாகக் கொடுக்க முடியும். பாடல்களைச் சொல்லிக் கொடுக்கும் போது பாடலின் குணத்திற்கேற்ப, குரல் வேறுபாட்டையும் நடிப்புத் தன்மையையும் இணைத்து கற்றுக் கொடுத்தால் குழந்தைகள் ஆர்வமாகச் செய்வார்கள். மேலும், புதுப்புதுப் பாடல்களைக் கற்றுக்கொள்ள குழந்தைகள் விரும்புகின்றனர். பாடத்தில் இல்லாத பல பாடல்கள் ஆசிரியருக்குத் தெரிந்திருத்தல் அவசியம். முதலில் வார்த்தைகளைப் பாடலாகக் கற்றுக்கொடுத்து பிறகு அதை வாசிக்கச் செய்தால் அந்த வார்த்தைகளைக் குழந்தையால் எளிதில் அடையாளம் கண்டு வாசிக்க முடியும்.

**பேசுதல்**

பாடங்களை நடித்துக் காட்டி, இடையிடையே உரையாடல்கள், பாடல்கள் என அமைத்துக் கொள்வோமானால் அவை குழந்தைகளின் மனதில் எளிதாகப் பதிந்துவிடும். குழந்தைகளின் கற்பனை வளத்தை வளர்க்க, அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வரையில் நடந்த, பார்த்த, கேட்ட விஷயங்களைக் கதையாகச் சொல்லச் சொல்லலாம். வீட்டில் உள்ள விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடிகளைப் பற்றிச் சொல்லச் செய்யலாம் . ஆத்திசூடி போன்றவற்றை மொழிப்பயிற்சி, நாப்பயிற்சி என்ற அளவிலே மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். அறிவுரை, நீதி சொல்வது என்ற அளவிலே அவற்றைத் தவிர்த்து விடலாம். பல அறிவுரைகள் இன்றைய சூழலுக்குப் பொருத்தமானதாக இல்லை.

குழந்தைகளைக் கதை சொல்லச் செய்தல், சம்பவங்களைச் சொல்லி அவற்றை நடித்துக் காட்டச் செய்தல், நாடகமாக நடிக்கச் செய்தல், படங்களை வரையச் செய்தல் ஆகிய அனைத்தும் பயிற்று முறையில் இணைக்கப்படல் வேண்டும். குழந்தைகளோடு நெருக்கமாகப் பேசி அவர்களை நம்மோடு உரையாடச் செய்தல் வேண்டும். குழந்தைகளிடம் அப்போதுள்ள சூழலுக்கேற்ப உரையாடலை நிகழ்த்த வேண்டும். உதாரணமாக, ஒரு மாணவர் காலதாமதமாக வருகிறார் என்றால், அதற்கான காரணத்தை விளக்கச் சொல்லலாம். பள்ளிக்கு வரும் வழியில் பார்த்த விஷயங்களைச் சொல்லச் செய்து அதிலிருந்து

உரையாடலை வளர்த்தெடுத்துச் செல்லலாம். குழந்தைகளைக் கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாகப் பேச விட வேண்டும். ஆசிரியர் கதைகளைச் சொல்லி குழந்தைகளையும் கதை சொல்லத் தூண்ட வேண்டும்.

குழந்தைகள் அனைவரையும் பேசச் செய்ய முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். பேசுவதற்குக் கூச்சப்படுகின்ற பிற குழந்தைகளையும் கதை சொல்லலில் ஈடுபட வைக்கும் உத்தியை ஆசிரியர் கையாள வேண்டும். வார்த்தை விளையாட்டுப் பயிற்சிகள் கொடுக்கலாம். அது, பல்வேறு வார்த்தைகளைக் குழந்தைகளுக்குப் பரிச்சியமாக்கும். ஆசிரியர் வாசித்தபின் மாணவர்களைப் பின்பற்றச் செய்யலாம். பிறகு, அவர்களைத் தனியாகப் படிக்கச் சொல்லலாம்.

**வாசித்தல்**

வகுப்பறையில் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டிய மொழி, பேச்சுமொழிதான். அதிலிருந்து தொடங்கினால்தான் குழந்தை, தமிழ்ப் பாடத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும். ஒவ்வொரு வட்டாரத்திற்கே உரிய சிறப்பான சொற்களைச் சேகரித்து, தொழில் சார்ந்தும் வயல் சார்ந்தும் விளையாட்டுக்கள் சார்ந்தும் உள்ள சொற்களைக் கற்பிக்க வேண்டும். வட்டார வேறுபாட்டை உணர்த்துவதற்கு ஏற்றாற் போன்ற அகராதியை உருவாக்க வேண்டியது அவசியம். இத்தகைய மொழி அகராதிகள் மொழிக்கல்விக்கு இன்றியமையாதவை.

எழுத்துக்களின் கூட்டுதான் வார்த்தை. அ-ம்-மா - என்பதுதான் அம்மா. பல்வேறு வார்த்தைகளை ஒன்றிணைப்பதுதான் வாக்கியம் என்பதைக் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும். குழந்தைகள் பேசும் ஒலிவடிவத்தையும் எழுத்து வடிவத்தையும் சொல்லி, எழுதிப்போட்டு தான் குழந்தைகளுக்கு விளங்க வைக்க முடியும். 'அம்மா' என்ற சொல்லிற்கான எழுத்து வடிவம் இது, என்பதைக் கறும்பலகையில் எழுதிப்போட்டு விளக்கலாம். குழந்தைகள் பேசும் பல்வேறு சொற்களை, கறும்பலகையில் எழுதிக்காட்டி விளக்குவதன் மூலம் பேச்சிற்கும் எழுத்திற்குமான தொடர்பு மற்றும் வேறுபாட்டை விளக்க முடியும். பேச்சு மொழியாக உள்ள வார்த்தை, பொதுமொழியாக மாறும்போது என்ன வேறுபாட்டை அடைகிறது என்பதையும் விளக்குதல் நல்லது.

விலங்குகளின் உருவங்களும் அவற்றின் பெயர்களும் உள்ள அட்டைகளைப் பல துண்டுகளாக வெட்டிவிட வேண்டும். அவற்றை இணைக்கும்படி சொல்ல வேண்டும். குழந்தைகள் அந்த உருவத்தை சரியாக இணைக்கும் போது அந்த விலங்கின் பெயரும் உருவமும் அவர்களுக்குக் கிடைத்துவிடும். பேச்சு வழக்கு சொற்களையும் பாடங்களில் சேர்த்து விட்டால் குழந்தைகள் அவற்றை எளிதாக அடையாளம் காண முடியும்.

பாடநூல் தவிர்த்த பிற வாசிப்பு நூல்களும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதில் சிறு சிறு சொற்களும் சிறு சிறு தொடர்களும் இணைந்த கதைகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் ஒவ்வொரு பத்தி வாசிக்கச் செய்யலாம். அதிலிருந்து கேள்விகளைத் தயாரிக்கச் செய்யலாம். குழுக்களாகப் பிரித்து குழந்தைகளைச் செயல்பட செய்யலாம். ஆசிரியர் கறும்பலகையில் எழுதும் போது வேண்டுமென்றே பிழையாக எழுத வேண்டும். அதை மாணவர்கள் கண்டுபிடித்து சொல்லுமாறு மாணவர்களைத் தூண்ட வேண்டும். அப்போது அவர்களது மொழியாற்றல் வளர வாய்ப்புள்ளது.

படக்கதைகள் அடங்கிய புத்தகங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகள் யோசித்து செய்யக் கூடிய அளவிற்கு அப்புத்தகத்தில் வாய்ப்புகள் இருக்க வேண்டும். பாடல், விளையாட்டு, ஓவியம், கதை இவையே குழந்தைகளுக்கான உலகமாக உள்ளது. இவற்றைப் பயன்படுத்தி மொழியைப் பயிற்றுவித்தால் சிறப்பாக இருக்கும்.

பல இலக்கியங்கள் சமயம் சார்ந்தனவாக இருக்கின்றனவே தவிர, சமூகம் சார்ந்தனவாக இல்லை. அதனால், குழந்தைகளின் மனநிலைக்கு ஏற்ப இருக்கின்றவற்றை மட்டும் கொடுத்து மற்றவற்றைத் தவிர்க்கலாம். ஒன்றிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை மிக எளிமையான திருக்குறள், மற்றும் சில செய்யுட்களை அறிமுகப்படுத்தலாம். கடினமாக சொற்கள் தவிர்க்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, *"ஔடதம்"*. செய்தித் தாள்களில், இதழ்களில் இடம் பெறும் தலைப்புச் செய்திகளை வெட்டி எடுத்து வந்து மாணவர்களை வாசிக்கச் செய்யலாம். தனித்தனியாக எல்லா மாணவரையும் சேகரிக்கச் சொல்லலாம். தொலைக்காட்சியில் பேசுபவர்களைக் கவனித்து, அதில் உள்ள தவறான உச்சரிப்பு முறையைக் குழந்தைகளுக்கு விளக்கலாம்.

தொலைக்காட்சியில் போடப்படும் எழுத்துச் செய்திகளை கவனித்துப் படிக்கக் கற்றுக்கொடுக்கலாம்.

**படைப்பாற்றலை வளர்த்தெடுத்தல்**

படம் வரையச் செய்தால் குழந்தைகள் ஆர்வமாக ஈடுபடுகின்றனர். அவர்கள் வரைந்த ஓவியத்தைப் பற்றிக் கேட்டால் விரிவாகச் சொல்கின்றனர். குழந்தைகளிடம் படங்களைக் கொடுத்து அப்படங்களுக்கேற்ற விவரணையைச் சொல்லச் செய்து, பின் எழுதச் செய்யலாம். குழந்தை, சொல்வதற்கும் எழுதுவதற்குமான வேறுபாட்டை அப்போதைக்கக்போதே ஆசிரியர் விளக்க வேண்டும்.

மாணவர்களையே குழுக்களாகப் பிரிந்து கதைகளை உருவாக்கச் செய்யலாம். ஒரு கதையை, பகுதி பகுதியாகப் பிரித்துப் போட்டு விட்டு அவற்றைப் படித்துப் பார்த்து முழுமையான கதையாக உருவாக்கச் சொல்லலாம். அவ்வாறு உருவாக்கிய கதையை உரையாடலாக மாற்றி, நடித்துக் காட்டச் செய்யலாம்.

குழந்தைகள் பொதுவாகவே படைப்பாற்றல் திறன் உடையவர்கள். அவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒரு வரி கவிதை எழுதிப் போட, அதை முழு கவிதையாக ஆக்கும் வேலையைக் குழுக்கள் மேற்கொள்ளலாம். அல்லது குறிப்பிட்ட தலைப்பு கொடுத்து கவிதை எழுதச் சொல்லலாம்.

# தமிழ்மொழிக் கல்வியில் பாடச்சுமை

முனைவர் த. பரசுராமன்

(மேலே பேசப்பட்ட செய்திகளுக்கு வலுசேர்க்கும் விதமாக முனைவர் த.பரசுராமன் அவர்கள் எழுதிய கட்டுரையைக் கீழே தருகிறோம். இக்கட்டுரை பரவலான விவாதத்திற்கான தொடக்கப்புள்ளியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.)

பாடச்சுமை என்பதைப் பாடங்களின் எண்ணிக்கையைக் கொண்டோ, பாடங்களை நடத்த ஆசிரியர்க்கு ஆகும் நேரத்தைக் கொண்டோ மட்டும் பார்ப்பது பயன்தராது. பாடச்சுமை எனும்போது நாம் மாணவர்களுக்குப் பாடங்கள் எவ்வாறு சுமையாக அமைந்துள்ளன எனும் அடிப்படையில் பார்ப்பதால் பாடங்கள் எப்படி உள்ளன என்பதையும் கவனிக்க வேண்டும். மேலும், தேர்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கல்வி பார்க்கப்படும் எதார்த்த நிலையில் அதையும் கவனிக்க வேண்டும். மொத்தத்தில் பாட எண்ணிக்கை, பாட அளவு, பாடக்கருத்து, பாட அமைப்பு, பாடஞ்சொல்லும் முறை, தேர்வு முறை என எல்லா நிலையிலும் தக்க மாற்றங்கள் செய்தால்தான் மாணவர்களுக்குப் பாடச்சுமையைக் குறைக்க முடியும்.

1. தொடக்கநிலைத் தமிழ்ப் பாடநூல்களில் பயன்படுத்தும் சொற்கள் மாணவர்களின் வயது நிலைக்கு ஏற்றதாக இருப்பதில்லை. இதனால், குழந்தைகள் மிரட்சி அடைந்து பள்ளியை விட்டு விலகவும் நேரலாம். மேலும், இது 'தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு'ச் செல்வது எனும் கற்பித்தல் கொள்கைக்கு மாறானது. எனவே, முதலில் மாணவர்கள் கேட்டு, பேசி வந்த ஆயிரக்கணக்கான சொற்களை வாசிக்க, எழுதச் செய்துவிட்டுப் பிறகு கடினமான சொற்களுக்குப் போகலாம். தமிழில் இதுவரை சொற்களஞ்சியம் வயது நிலைக்கு ஏற்ப படிநிலை செய்யப்படவில்லை. இதைச் செய்து தருமாறு பல்கலைக்கழக மொழியியல் துறைகளையோ, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் போன்றவற்றையோ தமிழக அரசு கேட்டுக்கொள்ளலாம்.

2. மொழிப் பாடத்தில் குறிப்பிட்ட வகுப்புவரை அறிமுகப்படுத்தப்படாத வாக்கிய அமைப்புகள் அந்த வகுப்புக்குரிய அறிவியல், சமூகவியல் போன்ற

பாடநூல்களில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், அந்தப் பாடங்களை மாணவர்கள் புரிந்து கொள்வது கடினம். இதைத் தவிர்க்க பிற பாடநூல்களில் பயன்படுத்தும் வாக்கிய அமைப்புக்களை அதற்கு முன் உள்ள வகுப்புகளிலேயே தமிழில் அறிமுகம் செய்ய வேண்டும். அல்லது குறிப்பிட்ட வகுப்பில் அறிவியல் போன்ற பாடநூல்களில், தமிழ்ப் பாடநூலில் அதுவரை பயன்படுத்தாத, மாணவர்கள் அன்றாட வாழ்வில் அதிகம் பயன்படுத்தாத வாக்கிய அமைப்புகளைப் பயன்படுத்தாமல் பாடம் எழுத வேண்டும்.

3. மொழி என்பது மாற்றம் அடைந்து கொண்டு வருவது. இது இயல்பானதும் தவிர்க்க முடியாததும் ஆகும். ஆனால், நாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அன்றைய மொழிக்கு எழுதப்பட்ட இலக்கண நூலை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கற்பித்து வருகிறோம்.

   இதனால், மாணவர்கள் இன்றைக்குத் தேவையில்லா விதிகள் பலவற்றைக் கற்க வேண்டியுள்ளது. மேலும் இன்றைய தமிழுக்கு மாறான விதிகளையும் கற்க வேண்டியுள்ளது. தேவையில்லாவற்றையும் மாறானவற்றையும் கற்பது இரட்டைச்சுமையல்லவா? எனவே, இன்றைய தமிழுக்குரிய இலக்கணம் பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டும். தற்காலத் தமிழ் இலக்கணம் கற்பிக்க ஏற்பாடு செய்வதில் தாமதம் ஏற்படின் தற்காலத் தமிழுக்குப் பொருந்தாத இலக்கணப் பகுதிகளை உடனடியாக நீக்கிவிட வேண்டும். (எடுத்துக்காட்டு : ந், ஞ் ஆகிய எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வரும் எனக்கூறி வெரிந், உறிஞ் போன்ற சொற்களைச் சான்று காட்டுவது) இவ்வாறு இலக்கணப் பகுதியைப் பாதியாகக் குறைக்கலாம்.

4. தொடக்க நிலையிலேயே நேரடி இலக்கணம் கற்பித்தல் தொடங்குகிறது. நன்றாக எழுதவும் வாசிக்கவும் கற்கவே கடினமாக இருக்கும் நிலையில் இலக்கணம் கற்பித்தல் சுமையாக இருப்பதோடு இலக்கணத்தின் மீதே வெறுப்பை ஏற்படுத்தி விடுகிறது. மேல் வகுப்புகளில் இலக்கணத்தை மாணவர்கள் ஒதுக்கி விடும் நிலை உள்ளதற்கு இதுவும் ஒரு காரணமாகும். எனவே, ஐந்தாம் வகுப்பு முடிய நேரடி இலக்கணம் கற்பிப்பதைத் தவிர்க்க வேண்டும். பயிற்சி

வாயிலாகவே மொழியமைப்பைக் கற்பிக்கப் பாடநூலில் வழி வகை செய்ய வேண்டும்.

5. மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் புரிந்து கொள்ள முடியாத பழைய இலக்கியங்களில் இருந்து செய்யுள்கள் தொடக்க நிலையில் இடம் பெறுகின்றன. இதனால், ஆசிரியர்களால் மாணவர் புரிந்து கொள்ளுமாறு விளக்கிச் சொல்ல முடிவதில்லை. மாணவர்களும் புரிந்துகொண்டு தேர்வில் விளக்கம் எழுத முடிவதில்லை. எனவே, மாணவர்களுக்கு மனப்பாடம் செய்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போகிறது. இதனால், மனப்பாட ஆற்றல் குறைந்தவர்கள் அறிவு குறைந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு மனப்பாடம் செய்யும் சுமை ஏற்படுகிறது. எனவே, தொடக்க நிலையில் குழந்தைகள் புரிந்து கொண்டு தாங்களாகப் பாடிப் பாடி மனத்தில் இருத்திக் கொள்கின்ற குழந்தைப் பாடல்களையே இடம் பெறச் செய்ய வேண்டும்.

6. தமிழ்ப் பாடநூலில் கதைகளைக் காண்பதே அரிதாகி விட்டது. இதனால், மாணவர்களின் தமிழ்ப் படிக்கும் ஆர்வம் குறையும். எனவே, தொடக்க நிலையில் உரைநடைப் பாடங்களில் பாதி, கதைகளாக இருக்க வேண்டும். மற்ற நிலைகளிலும் துணைப்பாடம் என்ற வகையில் இல்லாமல் சிறுகதைகள் பாடநூலில் இடம் பெற வேண்டும்.

7. மொழிப்பாடம் திறன் பாடம்; கருத்துப் பாடமல்ல. எனவே, எல்லாக் கருத்துக்களையும் திணிக்கத் தமிழ்ப் பாடநூலை இடமாகக் கொள்ளக் கூடாது. இதனால், கருத்துக்களைக் கற்பிப்பதிலும் அவற்றைச் சோதனை செய்வதிலுமே கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மொழித்திறன் வளர்ச்சிக்கு வாய்ப்பில்லாமலும் மனப்பாடத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்து விடுகிறது. எனவே, 'சிறு குடும்ப நெறி, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விதிகள் என்பன பாடநூலில் இடம் பெற வேண்டும்' என்று குரல் எழுந்தாலும் உடனே அவற்றைத் தமிழ்ப் பாடநூலில் சேர்ப்பதை நிறுத்த வேண்டும். மாணவர்களின் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள், மொழித்திறனை வளர்க்கும் நோக்கத்தில் அமைய வேண்டும்.

8. தமிழ்ப் பாடநூல்களில் பாடங்கள் தகவல் களஞ்சியங்களாக உள்ளன. சங்க இலக்கியம் பற்றிய ஒரு பாடம் என்றால், எப்போது எழுதப்பட்ட நூல்கள், அதன் ஆசிரியர்கள் என்று பட்டியலாகப் பாடம் இருக்கிறது. இதனால், மாணவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டியதாகிறது. மனப்பாடம் செய்து, பிறகு அவற்றை மறந்து விடவே இப்படியான பாடங்கள் உதவும். எனவே, தகவல்கள் குறைந்து மொழியின் அழகு வெளிப்படுவதாயும் மொழியிலும் இலக்கியத்திலும் ஈடுபாடு ஏற்படுவதாகவும் பாடங்கள் அமைய வேண்டும். சங்க இலக்கியம் பற்றிய பாடம் என்றால், அதை மேலும் படிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படுவதாக அமைய வேண்டும்.

9. தமிழ்ப் பாடத்திற்கான தேர்வுகள் மனப்பாடம் செய்து எழுதுவதற்கே பெரும்பாலும் வகை செய்கின்றன. இதனால், மனப்பாடத் திறன் பெற்றவர்களே மதிப்பெண் பெற முடியும். மேலும் திறன் வளர்ச்சி எதிர்பார்த்த அளவு மாணவர்களிடம் ஏற்படாது. எனவே, தமிழ்த் தேர்வுகளில் சொந்தமாக எழுதுவதற்கு அதிக இடம் ஒதுக்க வேண்டும்.

10. மொழிப்பாடம் என்பது கேட்டல், படித்தல், பேசுதல், எழுதுதல் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது. ஆனால், அவற்றிற்கு ஏற்ப பாடங்களை நடத்த நேரம் கிடைப்பதில்லை. இதனால், மாணவர்களின் மொழித்திறன் வளராது. விடைகளை மனப்பாடம் செய்து எழுதுபவர்களே மதிப்பெண் பெற முடியும். எனவே, சிறார்களை வளர்ப்பதற்கு உரிய வகையில் பயிற்சிகள் கொடுத்துப் பாடம் நடத்த ஏற்ற வகையில் பாடங்கள் குறைக்கப்பட வேண்டும். தேர்வும் தக்கவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

11. மொழித் தேர்வில் கருத்தை மட்டும் பார்த்து மதிப்பெண் இடும் முறையே இன்று உள்ளது. இதனால், நிறைய கருத்தை மனப்பாடம் செய்வதே சிறந்தது என்றாகிறது. மேலும் இதே நோக்கில் பாடம் நடத்துவதால் மொழிப் பயிற்சிக்கு இடம் இல்லாமல் போய், மாணவர்களுக்குத் தானாக எழுத முடியாமல் போய், கருத்தோடு மொழியையும் மனப்பாடம் செய்யும் கூடுதல் சுமை ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க மொழித்தேர்வில் மொழித் திறனைப் பார்த்து மதிப்பெண் இடும்முறை வேண்டும்.

12. தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கற்றல் அளவுகள் சிலர் கூடி அமர்ந்து முடிவெடுத்து அறிவித்தவையாக உள்ளன. இந்த அளவு நடைமுறைக்கு ஏற்றதாக இல்லாததால் மாணவர்களுக்குக் கூடுதல் சுமையாகிறது. எனவே, குறைந்தபட்ச கற்றல் அளவுகளை ஆய்வு செய்து முடிவு செய்ய வேண்டும். அதிலும் பின்தங்கிய கிராமப்புற பள்ளிகளில் ஆய்வு செய்து முடிவு செய்ய வேண்டும்.

13. தமிழ்ப்பாடநூல்கள் கிராமப்புற மாணவர்களை அந்நியப்படுத்தும் வகையில் உள்ளன. அவர்கள் வாழ்வில் கண்ட, கேட்ட, சந்தித்த எதையும் அல்லது யாரையும் பாடநூலில் பார்க்க முடிவதில்லை. எதில் ஈடுபாடு இல்லையோ அது சுமையாகத்தான் இருக்கும். கிராமப்புற மாணவர்கள் ஈடுபாடு கொள்ளத் தக்கதாய் இல்லாமல் அவர்களுக்குத் தொடர்பில்லாத வேறு ஓர் உலகத்தைக் காட்டுகிறது பாடநூல்கள். பாடநூலைப் பயன்படுத்துபவர்கள் எழுபது சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கிராமப்புறத்தினர் என்பதால் அவர்களைக் கருத்தில் கொண்டு பாடநூல்கள் அமைய வேண்டும்.

தற்போது தமிழ்ப் பாடநூல்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும் அவை போதா. மாற்றங்கள் விரைந்தும் முழுமையாகவும் ஏற்பட வேண்டும்.

(நன்றி : *ஊற்று* - ஏப்ரல் 2004)

# இறுதியாக

இவ்வாய்வின் இறுதியில், மொழியின் உயிர்ப்பாய் விளங்கும் மக்களின் மொழியைப் புறக்கணிக்க இயலாது என்பதில் உறுதிப்பட்டோம். மக்களின் மொழி என்பது அவர்கள் வாழும் சூழலை சார்ந்தே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது (சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்தும் பாடம் இதுதான்). அவர்கள் வாழும் நிலம், செய்யும் தொழில், உண்ணும் உணவு, பாராட்டும் உறவுகள், கொண்டாடும் விழாக்கள், இவை அனைத்தும் இணைந்துதான் குறிப்பிட்ட பகுதியில் வழங்கும் மொழிக்குரிய தனிச்சிறப்பான பண்பை வழங்குகின்றன. எனவே, நாம் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் மொழிக் கல்வியில் பல்வேறு சூழல்களில் வழங்கும் தமிழுக்குரிய - அம்மண்ணிற்குரிய - பண்புகள் இடம்பெறல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட வாழ்வியற் சூழல், அதன் பண்பாடு, அதனூடாக வெளிப்படும் மொழி ஆகியவற்றைப் பிற சூழல்களில் வாழும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதாக நம்முடைய மொழிக்கல்வி அமைதல் வேண்டும்.

இவ்வாறு அமையும்போது 'பேச்சு மொழி தவறானது, கொச்சையானது' என்றும் 'எழுத்து வழக்கு சரியானது, உயர்ந்தது' என்றும் நம் பொதுப்புத்தியில் பதிந்துவிட்ட சிந்தனை உடைபடும். குழந்தைகள் பேசும் பேச்சையும் வாழும் உலகத்தையும் புரிந்து கொள்ளவும் அவற்றை மதிக்கவும் இத்தகைய கல்விமுறை நமக்கு உதவும்.

முக்கியமான மற்றொன்று, கல்வியாளர்கள் பலரும் கூறுவது போல் பள்ளியின் சூழலிலும் ஆசிரியர்கள் மனநிலையிலும் ஏற்பட வேண்டிய மாற்றங்கள். பள்ளியை, சிறையைவிடக் கொடுமையான ஒன்றாக மாற்றுவது என்பதுதான் தற்போது நடைபெறுகிறது. அதை 'ஒழுங்கு' என்ற போர்வையில் பெற்றோர்களும் அங்கீகரிக்கிறார்கள். எத்தனைப் பள்ளிக் கூடங்கள் குழந்தைகளைப் பேச அனுமதிக்கின்றன? விலங்குகளைப் போல குழந்தைகளை நடத்தும் போக்கைப் பள்ளிகள் மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது.

'குழந்தைகளைச் சுதந்திரமாகப் பேசவும் அவர்களது கருத்துக்களைக் கூறவும் அனுமதிப்பது' என்பதைக் காட்டிலும்

கருத்துக்களைக் கூற அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும். அப்படிப்பட்ட கல்விக் கூடங்களிலிருந்து வெளிவரும் மாணவர்கள்தான் பின்னாளில் நிறைய சாதிக்கின்றனர் என்பது கண்கூடு.

மேலும், நேரடியாகக் களத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் கருவிநூல்கள் உருவாக்கப்படல் வேண்டும். தொடர்ந்து வகுப்பறையில் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இவை வடிவமைக்கப்படல் நலம். பயிற்சிமுறைகள், மொழியியல் குறிப்புகள், கல்வி துணைக்கருவிகளைத் தயாரிக்கும் முறைகள் எனப் பலவற்றையும் உள்ளடக்கியதாகக் கருவிநூல்கள் அமைதல் வேண்டும். ஆசிரியர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றவர்களுடன் உரையாடவுமான ஆரோக்கியமான சூழல் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய அவசியத்தை அனைவரும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டிய காலம் இது.

செங்கல் சூளையைப் போல் கல்விக் கூடங்கள் இன்று மாறிவருகின்றன. ஆம், எல்லாக் குழந்தைகளும் ஒரே அளவில், ஒரே உயரத்தில், ஒரே வண்ணத்தில். எல்லாக் குழந்தைகளும் எப்படி ஒன்றுபோல் இருக்க இயலும்? படைப்பாற்றல் என்பதே ஒருவரை மற்றவரிடமிருந்து வேறுபடுத்தும் ஒன்றுதானே! தன்னுடைய மொழியை பயமின்றி, நம்பிக்கையோடு கையாளுகின்ற வகையில் குழந்தைகளைப் பழக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.தாய்மொழியின் வழி சுதந்திரமாகச் சிந்தித்து செயல்படும் படைப்பாற்றல் மிக்க குழந்தைகளையும் இளைஞர்களையும் உருவாக்க முயலுவோம்.

# பின்னிணைப்புகள்

# பின்னிணைப்பு 1

ஜனவரி 2002 முதல் மார்ச் 2003 வரை தமிழகம் முழுவதும் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் களஆய்வு செய்த பள்ளிகளின் எண்ணிக்கையைக் கீழே தருகிறோம். ஆசிரியர்களின் வேண்டுகோளிற்கிணங்க பள்ளி - களின் பெயர்களை இங்கு வெளியிடவில்லை.

| மாவட்டங்கள் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 7 |
| வேலூர் | 4 |
| திருவண்ணாமலை | 5 |
| விழுப்புரம் | 1 |
| பாண்டிச்சேரி | 3 |
| தருமபுரி | 5 |
| கோவை | 4 |
| தஞ்சாவூர் | 4 |
| திருச்சி | 1 |
| மதுரை | 5 |
| நெல்லை | 4 |
| கன்னியாகுமரி | 3 |
| **மொத்தம்** | **46** |

# பின்னிணைப்பு 2

## களஆய்வின்போது ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட வினாக்கள்

- முதற் வகுப்பில் குழந்தைகளின் வயது வரம்பு?
- குழந்தைகளின் வீட்டுச் சூழல்?
- வகுப்பில் குழந்தைகளின் எண்ணிக்கை?
- வகுப்பறையின் அளவு?
- தமிழ்ப் பாடநூற்கள் அல்லாத வேறு நூற்களைப் பயிற்றுவிக்கப் பயன்படுத்துகிறீர்களா?
- L. K. G., U. K. G., க்கான தமிழ்ப் பாடநூற்கள் என்ன?
- குழந்தைகள் எழுதுவதையும் படிப்பதையும் பிரித்து அறிந்து கொள்கின்றரா?
- பயிற்றுவிக்கும் வழிமுறைகள் யாவை?
- பயிற்றுவித்தலில் புதுமைகள் என்ன?
- தமிழ்ப் பாடத்தில் குழந்தைகளே செய்து பார்த்து கற்கும் பாடங்கள் உள்ளனவா?
- தமிழ்ப் படிப்பதற்கென்று ஒதுக்கப்படும் காலஅளவு?
- முதல் ஐந்து வகுப்புகளுக்கு என்னென்ன பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன?
- மொழிப்பாடங்களை நடத்துவதில் உங்களுக்கு உள்ள சிக்கல்கள் என்னென்ன?
- மொழிப் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் வேண்டும் என நினைக்கிறீர்களா?
- ஆயத்ததப்படுத்துதல் உண்டா? அது எந்த மாதிரி அமையும்?
- வட்டார மொழியைப் பாடத்திட்டத்தில் பயன்படுத்தலாமா?
- குழந்தைகளைக் களப்பணிக்குக் கூட்டிச் செல்வது உண்டா?
- தமிழ் எழுத்துப் பயிற்சியை எப்போதிருந்து தொடங்கு - கிறீர்கள்?
- எழுத்துக்களை எப்பொழுது மாணவர்கள் அடையாளம் காண்கின்றனர்?
- எந்த எழுத்துக்களில் பிழைகள் வருகின்றன?
- தொடக்க வகுப்புகளுக்கு 247 எழுத்துக்கள் தேவையா?
- மாணவர்கள் எழுத்துக்கூட்டி வாசிக்க எவ்வளவு காலம் ஆகிறது?
- உங்கள் பள்ளியில் போதுமான ஆசிரியர்கள் உள்ளனரா?

# பின்னிணைப்பு 3

## சில பயிற்சிகள்

களப்பணியின் போதும் திருச்சியில் நாங்கள் நடத்திய இரண்டாவது பயிலரங்கின் போதும் பேசுதல் மற்றும் எழுத்துதலுக்குக் கையாளும் சில வழிமுறைகளை ஆசிரியர்கள் பகிர்ந்து கொண்டனர். அவற்றைக் கீழே தருகிறோம். இவை உங்களுக்கும் உதவக்கூடும்.

**பேசுதல் தொடர்பான பயிற்சிகள்**

ஒன்றாம் வகுப்பில் முதல் மூன்று மாதங்கள் வாய்மொழிப் பயிற்சிகளை மட்டுமே கொடுக்க வேண்டும். கேட்டல் - பேசுதல் திறன்களுடனே சேர்த்து, வாய்மொழியாகத் தமிழ் எழுத்துக்களையும் (உயிர் எழுத்து, மெய்யெழுத்து என) வரிசையாகச் சொல்லித் தரலாம். ஏனென்றால் க, கா, கி, கீ... வரிசை வந்துவிட்டால் மாணவரே ட, டா, டி, டீ... வரிசையை சொல்லிவிடுவர்.

247 எழுத்துக்களையும் முதல் வகுப்பிலேயே கற்பிப்பது சாத்தியமில்லை. சில எழுத்துக்களை இரண்டாம் வகுப்பிற்குக் கொண்டு போகலாம். எந்தெந்த எழுத்துக்களை இரண்டாம் வகுப்பிற்குக் கொண்டு செல்வது என்பது பற்றி ஒரு கருதுகோளை முன்வைக்கிறோம். அதாவது உகரம், ஊகாரம், ஒளகாரம் மற்றும் அதனுடன் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்களையும் கிரந்த எழுத்துக்களையும் இரண்டாம் வகுப்பிற்குக் கொண்டு போகலாம். மற்றவற்றை முதல் வகுப்பிலேயே கற்பிக்கலாம்.

முதலில் ஒரு சொல்லை முழுதாகச் சொல்ல வைத்து பின்னர், எழுத்துக்கூட்டி படிக்கச் செய்வது சிறந்தது. படம் என்றால் 'படம்' என்று முதலில் சொல்ல வைத்துவிட்டு, ப - ட - ம் என்று எழுத்துக்கூட்டிச் சொல்லித் தந்தால் மாணவர்களால் 'ப்'வையும் 'ட'வையும் சரியாக அடையாளம் காண முடியும். அப்படி அடையாளம் கண்டுகொண்ட பிறகு 'ப'வை எங்கே பார்த்தாலும் அல்லது 'ப' என்பதை ஒலித்து, 'எங்கே இருக்கிறது?' என்று கேட்டாலும், இதுதான் 'ப' என்று சொல்ல முடியும். மேற்சொன்னவாறு அடையாளம் காட்டப் பழக்கிய பிறகுதான் எழுத்திற்கு வரவேண்டும்.

உச்சரிப்புத் திறன், சொன்னதைப் புரிந்து கொண்டு திரும்பச் சொல்லுதல், சந்த நயம், அடுக்குத் தொடர், எதுகை - மோனை, ஊரின் சிறப்பு போன்றவை ஒன்றாம் வகுப்பில் முக்கியம். பாட்டைப் பாதியில் நிறுத்திவிட்டு, 'நீ என்ன செய்வே?' என்று கேட்கலாம். பாடல் தொடர்பாக மாணவர்களுக்குத் தெரிந்தவற்றையும் இணைத்து பாடச் சொல்லலாம்.

முதல் இரு வகுப்புகளுக்கான பாடல்கள், ஓசை நயம் உடையதாகவும் வந்த சொற்களே மறுபடி வரும்படியாகவும் எட்டு வரிகளுக்கு மிகாமலும் குழந்தைகளுக்குப் பழக்கமானவற்றை மட்டுமே பொருளாகவும் கொண்டிருத்தல் அவசியம். வாழ்க்கைக்குப் பயன்படாதவற்றை மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. எது வாழ்வோடு இணைந்துள்ளதோ அதை மட்டும் மனப்பாடம் செய்தால் போதும்.

பொருள் சார்ந்து, கருத்து சார்ந்து மட்டும் குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. அழகியல் சார்ந்தும் மொழி சார்ந்தும் வளத்தை உருவாக்க முடியும். வலிந்து கருத்தைத் திணிக்க வேண்டாம். பாடத்திட்டத்தில் உள்ள பாடல்கள் எல்லாம், தகவல்களையும் கருத்துக்களையும் உள்ளடக்கியனவாகவே இருக்கின்றன. கருத்தில்லாமல் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், இவை மட்டுமேதான் மொழி என்ற உணர்வை ஏற்படுத்தியதால் குழந்தைகளுக்கு மொழி மீதான ஆர்வம் குறைகின்றது.

ஏதாவது ஒரு பாத்திரத்தைக் கொடுத்து குழந்தைகளை நடிக்கச் சொல்லலாம். களஆய்வு மேற்கொள்ளச் செய்யலாம். ஏதாவது ஒரு நிலையில் குழந்தைகளை அவர்களாகவே செயல்படும்படி விட்டுவிட்டு நாம் தள்ளி நின்று கவனித்தால் எந்தெந்தக் குழந்தைக்குக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதைக் கண்டறியலாம். படைப்பாற்றலை வளர்க்கவும் இவை போன்ற பயிற்சிகள் உதவும்.

எழுத்துக்களே இல்லாத படப்புத்தகங்களைக் கொடுக்கலாம். அவற்றைக் கொண்டு குழந்தைகளின் உரையாடும் திறனையும் கதை கூறும் திறனையும் வளர்க்கலாம். நம்மை முன்னிறுத்தாது, நாமாக வலிந்து திறன்களை வளர்ப்பதைவிட இயல்பாகக் கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும்.

## எழுத்து தொடர்பான பயிற்சிகள்

*எழுத்துக்களை அடையாளம் காண*

1. 'எழுத்து தாயம்' என்றொரு விளையாட்டு. சோடா பாட்டில் மூடியின் உள்பக்கத்தில் எழுத்துக்கள் எழுதியிருக்கும். இரண்டுபேர் விளையாடுவார்கள். ஒருவர் போடும் போது குப்புற விழுகின்ற மூடியில் உள்ள எழுத்துக்களை மற்றொரு மாணவர் சொல்ல வேண்டும். பின்பு மற்றொருவர். இவ்வாறு மாறிமாறி விளையாடலாம்.

2. எழுத்து 'கேரம்' என்று வேறொரு விளையாட்டும் விளையாடலாம். 'கேரம் போர்டி'ல் எழுத்து அட்டைகள் இருக்கும். அதில் 'ஸ்ட்ரைக்கரை' வைத்து அடிக்க வேண்டும். அது எந்த எழுத்தைப் போய் அடிக்கிறதோ அந்த எழுத்தை மற்றவர் கூற வேண்டும்.

3. அப்புறம் 'எழுத்துக்களை இணைசேர்த்தல்'. 'ப' என்றால், அதே போல் மற்றொரு 'ப'வைக் கண்டுபிடிக்க வேண்டும்.

4. காற்றில் எழுதிக் காண்பித்து, 'அது என்ன எழுத்து?' எனக் கண்டுபிடிக்கச் சொல்லலாம்.

5. ஒரு குழு எழுத்தட்டைகளை எடுத்துக்காட்ட மற்றொரு குழு அது என்ன எழுத்து? என்று சொல்லலாம். முதலில் ஒரு எழுத்தைத் தனியே காட்டிவிட்டு பிறகு, அதை இரண்டு, மூன்று எழுத்துக்களுடன் சேர்த்துக்காட்டி, 'முதலில் காட்டிய எழுத்து எது?' என்று கேட்கலாம்.

6. அப்படி இல்லாமல் 'டீனன அயபே டிரவ' மாதிரி, பத்து 'ப'க்களுடன் இருக்கும் ஒரே ஒரு 'ம'வை மட்டும் அடையாளம் காட்டச் செய்யலாம்.

7. கரும்பலகையில் எழுதி அல்லது எழுத்தட்டைகளைத் தொங்க விட்டு அதன் மேல் பந்தை எறிந்து அது எந்த எழுத்தில் பட்டது? என்று கேட்டு விளையாடலாம்.

8. கரும்பலகையில் எழுத்துக்களை ஏதாவது ஒரு வரிசையில் எழுதிப்போட்டு, எழுத்தட்டைகளை மாணவர்களிடம் கொடுத்து அதே வரிசையில் அடுக்கச் செய்யலாம்.

9. 'க' என்ற ஒரு எழுத்தையே தனித்தனி துண்டுகளாக வெட்டிப் போட்டிருந்தால் அதை 'க' மாதிரி அடுக்கலாம்.

10. தூண்டில் மீன் விளையாட்டை எழுத்துக்களை அடையாளம் காண்பதற்கும் சொற்களை அடையாளம் காண்பதற்கும் பயன்படுத்தலாம்.

11. 'எழுத்து வடிவம் அமைத்தல்', இது குழு விளையாட்டு. 'ப' என்று சொன்ன உடனே மாணவர்கள் 'ப'வைப் போல் நிற்க வேண்டும். இதை இரு குழுக்களாக பிரிந்தும் செய்யலாம். ஒரு குழு எழுத்துக்களைச் சொல்ல, மற்றொரு குழு எழுத்துக்களைப் போல் நிற்கலாம்.

12. எழுத்துக்களைச் சரியாக அடையாளம் காண்கிறார்களா என்பதை விடுகதைகள் மூலம் சோதித்தறியலாம். உதாரணமாக:
*வடிவத்தைக் குறிக்கக் கூடியன*

* இரண்டு நண்பர்கள் வந்தனர். எதிரெதிரே நின்றனர். மூன்றாம் நண்பன் வந்தான். அவர்களுக்கிடையில் தரையில் படுத்துக்கொண்டான். - 'ப'

* தம்பி வந்து நின்றான். அண்ணன் தரையில் படுத்துக் கொண்டான் - 'ட'.

*சொல்லைக் குறிப்பன*

* உங்கள் பயணத்தின் பக்கத் துணைவன் ஆனால், உங்கள் பையனல்ல... பை

*சொல்லின் பொருளைக் குறிப்பன*

* சுடும் எழுத்து - தீ, பறக்கும் எழுத்து - ஈ, என்பதாகவும் விடுகதைகள் அமையலாம்.

குறிப்பிட்ட எழுத்தை அடையாளப்படுத்த

13. வார்த்தைகளை எழுதிவிட்டு அதில் ஒரு எழுத்தை மட்டும் சொல்லி, அந்த எழுத்தைச் சுற்றிக் கட்டம் போடவோ வட்டம் போடவோ சொல்லலாம்.

*ஒலிவடிவத்தையும் வரிவடிவத்தையும் இணைத்தல்*

14. ஒரு சொல்லைக் கற்கின்றபோது வரிவடிவம், ஒலிவடிவம் மட்டுமல்லாமல் இவை இரண்டின் இணைப்பும் தெரிய வேண்டும். இதற்கு 'சொல்வதெழுதுதல்' என்பது ஒரு சிறந்த வழிமுறையாகும். இதை நேரடியான தேர்வாக அல்லாமல் அதையே விளையாட்டாகவும் செய்யலாம். மாணவர்களைக்

குழுக்களாகப் பிரித்துவிட வேண்டும். அவர்களுக்கு ஐந்து நிமிடங்கள் கொடுக்கலாம். குழுவில் ஒருவர் மட்டும் எழுத வேண்டும். எழுதும் குழுவில் உள்ளவர்கள் ஒருவர் பின் ஒருவர் எழுதலாம். மற்ற மாணவர்கள் சொல்வார்கள். சொல்லப்பட்ட சொற்களையெல்லாம் எழுதி முடித்துவிட்ட பிறகு தவறில்லாமல் எழுதிய சொற்களுக்கு மதிப்பெண்களை அவர்களே வழங்குவார்கள். அதன் பின்னர் மற்றொரு குழுவினர் . . . என்பதாக அமைக்கலாம். இது மாணவர்களுக்கு மறைமுகமாக வழங்கப்படும் பயிற்சியாக அமையும்.

*ஒரு வரிவடிவத்தையும் இரண்டு ஒலிகளையும் கொடுத்து டையாளம் காணச்செய்தல்*

15. எப்படி என்றால், கரும்பலகையில் 'க' எழுதப்பட்டிருக்கும். ஆசிரியர் 'க', 'கா' (குறில், நெடில்) என்று இரண்டையும் சொல்லுவார். சொல்லப்பட்டதில் எந்த எழுத்து எழுதப் பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒலிப்பதில் பிரச்சனை வரக்கூடிய, குழப்பத்தை விளைவிக்கக் கூடிய எழுத்துக்களை இவ் விளையாட்டிற்கு எடுத்துக் கொள்ளலாம்.

16. மறுதலையாக, இரு எழுத்துக்கள் இருக்கும். ஆசிரியர் ஒரு ஒலி எழுப்புவார். ஒலிக்குரிய எழுத்தைக் கண்டுபிடிப்பது என்றும் வைத்துக்கொள்ளலாம். இந்த விளையாட்டை சொற்களுக்கும் பயன்படுத்த முடியும். எ.கா. படம், பாடம்...

*குறிலை நெடிலாக மாற்றுதல்*

17. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தும் இதைச் செய்யலாம். மறுதலையாக நெடிலைக் குறிலாக மாற்றுதல்.

**எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகள் உருவாக்குதல்**

18. ஒரு சொல்லைச் சொல்ல அச்சொல்லை, எழுத்தட்டைகள் கொண்டு அடுக்கச் செய்யலாம். எழுத்துக்களை இடம் மாற்றிப் போட்டு சரியாக எழுதச் செய்யலாம்.

19. படம் பார்த்து விடுபட்ட எழுத்துக்களை நிரப்புதல். இதிலும் ஒரே ஒரு வார்த்தையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

20. வினைச்சொற்களை நடித்துக்காட்டி, சரியான வார்த்தைகளைச் சொல்லவும் அந்த வார்த்தைக்கான எழுத்துக்களைக் கோர்க்கவும் வைக்கலாம்

21. மூன்று வரிவடிவங்கள் இணைந்து ஒரே எழுத்தாக அமையுமிடங்களில் ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு என்று பிரிக்காமல், "*கொ* எழுது" என்று ஒற்றை வரிவடிவமாகக் கற்பிக்க வேண்டும். இதற்குப் பதிலாக ஒற்றைக் கொம்பு போட்டு 'க' போட்டு துணையெழுத்து என்று கூறினால், மூன்று எழுத்து போலும் என மாணவர் முடிவு செய்து விடுவர்.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் எல்லாம் வரிவடிவத்தைத் தனியாக அடையாளம் காணுதல், வார்த்தைகளில் உள்ள குறிப்பிட்ட எழுத்தை அடையாளம் காணல், வரிவடிவத்தையும் ஒலிவடிவத்தையும் இணைத்துக் காட்டுதல், எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகள் உருவாக்குதல் என்ற அளவில் இருப்பன.

**வரிவடிவத்தை எழுதுதல் மற்றும் வாசித்தலுக்கான பயிற்சிகள்**

1. சொல்லும் சொல்லையும் பட அட்டையையும் இணைக்கலாம். இதை வாசித்தலுக்கான அடிப்படையாகக் கொள்ளலாம்.

2. முடிந்த அளவு சொற்களை உருவாக்க சுழல் அட்டையைப் பயன்படுத்தலாம். முதலில் குறிப்பிட்ட சில எழுத்துக்களைக் கொண்டு பல சொற்களை உருவாக்கலாம்.

3. ஒரு குழுவிலுள்ள மாணவர்கள் ஒரு சொல்லை வாசிக்க, இன்னொரு குழுவிலுள்ளவர்கள் எழுதுவது என்பதாக எழுத்துப் பயிற்சி கொடுக்கலாம்.

4. சொல் அல்லது வாக்கியத் தொலைக்காட்சிப் பெட்டி உருவாக்கி மாணவர்களே ஒவ்வொரு சொல்லாகச் சுற்றி வாசிக்கலாம்.

5. சொல்லும் வாக்கியத்திற்கேற்ற படத்தை இணைக்கச் செய்யலாம்.

6. படத்திற்குரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதச் செய்யலாம். அதாவது, தனித்தனி அட்டைகளில் எழுத்துக்களும் படங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். படத்திற்குரிய எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்து இணைத்து எழுத வேண்டும்.

7. படங்கலந்த வாக்கியங்களைக் கொடுத்து முழுவாக்கியங்களை எழுதுதச் செய்தல். (உ. ம்.) அவன் மாம்பழம் சாப்பிட்டான் என்றால், 'அவன்' இருக்கும்; 'சாப்பிட்டான்' இருக்கும்; நடுவில் மாம்பழத்தின் படம் இருக்கும். இதை முழு வாக்கியமாக

எழுதச்செய்யலாம். வினைச் சொற்களையும் எழுதும்படி செய்யலாம். ஆனால், 'ஓடுதலா? விளையாடுதலா?' என்பதைச் சரியாக விளக்குவதாகப் படங்கள் இருக்க வேண்டும்.

# பின்னிணைப்பு 4

## பரிசோதனை முயற்சிகள்

குழந்தைகளின் மொழி வளத்தையும் படைப்பாற்றலையும் ஆளுமையையும் வளர்த்தெடுக்கும் நோக்கத்தோடு உண்மையாகச் செயல்படும் பள்ளிகளும் இருக்கவே செய்கின்றன. இப் பள்ளிகளின் நோக்கங்களும் பயிற்றுமுறைகளும் பரவலாக்கப் பட்டால் சிறந்த விளைவுகள் ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

### 1. லிசே பிரான்சே, பாண்டிச்சேரி

இப்பள்ளி பிரஞ்சுவழிப் பள்ளி. பிரஞ்சு முறையிலான வகுப்புப் பிரிவுகளை உடையது. C-P (சே-பே) என்பது 6 - 7 வயது குழந்தைகளைக் கொண்ட வகுப்பு. இந்த வகுப்பிலிருந்தான் தமிழ் ஒரு பாடமாகக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. 10 வயதில்தான் தமிழை எழுதக் கற்றுக்கொடுக்கிறோம். அதுவரை வாய்மொழிப்பயிற்சி மட்டுமே. பாடல்கள், கதைகள் ஆகியவற்றுடன் சொன்ன கதையை ஓவியமாக வரையச் செய்தல், மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து நடிக்கச் செய்தல் என்பதாக வகுப்புகள் அமையும். குறிப்பிட்ட ஒரு வகுப்பிற்கு வாரத்தில் 2 பாடவேளைகள் மட்டுமே தமிழ் வகுப்புகள் இருக்கும்.

ஒரு பாடவேளை என்பது, ஒரு மணிநேரம். ஒரு பாடவேளையை நான்கு பதினைந்து நிமிடங்களாகப் பிரிக்கிறோம். முதல் பதினைந்து நிமிடங்கள் - சென்ற வகுப்பின் செய்திகள்; இரண்டாவது பதினைந்து நிமிடங்கள் - புதிய பாடல்கள், கதைகள்; மூன்றாவது பதினைந்து நிமிடங்கள் - கேள்விகள்; நான்காவது பதினைந்து நிமிடங்கள் - வரைதல், நடித்துக் காட்டுதல், சொன்ன சொற்களை எழுதுதல் (பெரிய வகுப்புகளுக்கு மட்டும்) என்பதாக நாங்கள் பகுத்துக்கொள்கிறோம்.

முதலில், குழந்தைகளுக்குப் பேச பயிற்சி அளிக்க வேண்டும். பிரஞ்சைப் பயிற்றுவிக்கும் போது ஒரு கதையைச் சொல்லிவிட்டு, பின்னர் அக்கதையிலிருந்து பல்வேறு கேள்விகளைக் கேட்கின்றனர். அதே பயிற்சி முறையை நாங்கள் தமிழிலும் கையாளுகிறோம். பொதுவாக, 'உன் பெயர் என்ன?' என்று கேட்டால் 'சுமதி' என்று சொல்லக் கூடாது. 'என் பெயர் சுமதி'

என்று சொல்ல வேண்டும். அதாவது, முழு வாக்கியமாகப் பேசப் பழக்குகிறோம்.

தொடக்கத்தில் கதை சொல்லல், பாடல் பாடுதல் போன்றவற்றின் மூலமாக மொழியைக் கற்பிக்கிறோம். நாங்கள் சொன்னவற்றைத் திரும்பச் சொல்லச் செய்கிறோம். தமிழகம், பாண்டிச்சேரி பகுதிகளின் கலை, கலாச்சரத்தைக் கற்றுக்கொடுக்கிறோம். பிரஞ்சைத் தாய்மொழியாகக் கொண்ட இக்குழந்தைகளுக்கு நமது நாட்டின் விழாக்களை அறிமுகம் செய்வதை முதல் நோக்கமாகக் கொள்கிறோம். ஒவ்வொரு மாதத்திலும் என்னென்ன விழாக்கள் நடக்கின்றனவோ, அவற்றைச் சொல்லிக்கொடுப்பதன் வாயிலாக மொழியையும் கற்பிக்கிறோம். சமய விழாக்கள், திருவிழாக்கள், தேசிய விழாக்கள் என அனைத்தும் இதில் அடங்கும். தூய்மையைப் பேணுவதே விழாக்களின் நோக்கம் என்பதைப் புரிய வைப்போம்.

ஆறு, ஏழு வயது குழந்தைகளுக்கு இரண்டு வார்த்தைகள் கொண்ட பாடல்களைச் சொல்லிக் கொடுக்கிறோம். உதாரணத்திற்கு, "குள்ள குள்ள வாத்து". பாடல்களைப் பாடும்போது கண்டிப்பாக கை, கால், உடலசைவுடன் பாட வேண்டும். காட்சி ரூபமான செய்கையின் மூலம் வார்த்தைகள் எளிதாகக் குழந்தைகள் மனதில் பதியும் என்பதால் இந்த வழிமுறையைப் பின்பற்றுகிறோம். பாடநூல்களில் அல்லது பிற கவிஞர்களின் பாடல்களில் வார்த்தைகள் கடினமானதாக இருப்பதால், எங்கள் குழந்தைகளுக்குத் தேவையான பாடல்களை நாங்களே எழுதிக்கொள்கிறோம்.

பிரஞ்சைத் தாய்மொழியாகக் கொண்ட குழந்தைகள் இவர்கள். ஆதலால், இவர்களுக்கு 'ட' உச்சரிக்க வராது. அதனால், தொடக்கத்தில் நாங்கள் படம், பட்டம் போன்ற சொற்களைத் தவிர்த்து விடுகிறோம். ஒரு கதையைச் சொல்லிவிட்டு, 'இதை நடித்துப் பார்க்கிறீர்களா?' என்றால் குழந்தைகள் ஆர்வத்துடன் முன்வருவார்கள். குழுக்களாகப் பிரித்து நடிக்கச் செய்வோம். ஒரு குழு நடிக்கும்போது மற்றவர்கள் பார்ப்பார்கள். அப்போது நடிப்பவர்கள் என்னென்ன தவறுகள் செய்கிறார்கள் என்பதை கவனித்து, தாங்கள் நடிக்கும்போது அவற்றைத் திருத்திக் கொள்வார்கள். மேலும் நடிக்கத் தேவையான வசனங்களை குழந்தைகளே உருவாக்கிக் கொள்கிறார்கள். அதனால், புதிய

புதிய சொற்கள் அவர்களுக்குத் தெரிய வருகிறது. ஒரு கதையைச் சொல்லி, அதைக் காட்சிகளாகப் பிரித்து வரைந்து காட்டச் சொல்லுவோம். குழந்தைகளின் நினைவாற்றலைப் பெருக்க இது உதவுகிறது.

வகுப்பில் பேச முயலும் குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். நாங்கள் ஏதாவது ஒரு பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, அது தொடர்பாகத் தங்களுக்குத் தெரிந்த கதையையோ செய்திகளையோ சொல்ல விரும்பும் குழந்தைகள் கைகளை உயர்த்துவார்கள். நாங்கள் பாடத்தை நிறுத்திவிட்டு அவர்கள் விரும்புவதைச் சொல்ல அனுமதிப்போம். கேள்விகள் கேட்கவும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும் குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். இவற்றின் மூலம் குழந்தைகள் பேசவும் கேட்கவும் தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கும் வகுப்பாக எங்கள் பள்ளியின் தமிழ் வகுப்புகள் இருக்கின்றன.

ஒரு வகுப்பில் 20 - 25 குழந்தைகள் வரை இருப்பார்கள். வரையறுக்கப்பட்ட பாடநூல்கள் இல்லை. ஒவ்வொரு வகுப்பிற்குமான பாடங்களை நாங்களே வகுத்துக் கொள்ளுவோம். நாங்கள் அ, ஆ என கற்றுக் கொடுப்பதில்லை. நேராக சொற்களுக்கே போய்விடுகிறோம். 'ஆறு' என்று சொல்லைச் சொல்லி, 'ஆ - று' என்று பிரித்து அடையாளம் காட்டிவிட்டு பின்னர் வரிவடிவத்தைக் கற்பிக்கிறோம். நான்குவரி நோட்டுக்களில் எழுதப் பழக்குகிறோம்.

11 - 12 வயது குழந்தைகளுக்குக் கற்பிக்க, தமிழ்நாட்டுப் பாடநூல்களைப் பயன்படுத்துகிறோம். இதிலும் பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு மேலும் தேவையானவற்றை நாங்களே இணைத்துக் கொள்வோம். உதாரணத்திற்கு "மரம் மரம் மாமரம்; பழம் பழம் மாம்பழம்" என்றால், "மரம் மரம் கொய்யா மரம்; பழம் பழம் கொய்யா பழம்" என்று சேர்த்துக் கொள்வோம். இது விளையாட்டு போலவும் இருக்கும். இதையே எழுதிப்போட்டு எழுதவும் சொல்வோம். இம் மாதிரியான இடங்களில் ஆசிரியரின் படைப்பாற்றல் திறன் செயல்பட வேண்டும்.

247 எழுத்துக்களை முழுவதும் கற்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. என்றாலும் முழுவதுமாக அறிமுகப்

படுத்தலாம். இக்குழந்தைகளுக்கு உச்சரிப்புப் பயிற்சி அதிகம் தேவைப்படுகிறது. நாக்கை சுழற்றி, வளைத்து, உதட்டைக் குவித்து, விரித்து என்று நன்னூலை அடிப்படையாகக் கொண்டு திருத்துவோம். இவர்களுக்கு 'ட, த்' உச்சரிப்பு கடினமான ஒன்று. தேர்வு என்று தனியாகக் கிடையாது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை - அதாவது மாதத்திற்கு இருமுறை வகுப்புத் தேர்வு நடத்துவோம். வட்டார மொழியிலிருந்து தொடங்கினாலும் தமிழ்ப் பயிற்றுவித்தலுக்குக் குறைந்தபட்சம் ஒரு பொதுமொழி வேண்டும் என்பது எங்கள் கருத்து.

இவ்வாறாக, இப்பள்ளியில் பணிபுரியும் தமிழாசிரியர்களான திரு.எம்.எஸ்.காந்திமேரி, திரு.அமல்ராயர் ஆகிய இருவரும் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

## 2. இந்தியன் வங்கி ஊழியர் அசோசியேஷன் பள்ளி

## குறிச்சி, பட்டுக்கோட்டை

**செயல்பாட்டு முறையில் கற்பித்தல்**

குழந்தைகளின் கற்பனை மற்றும் இயல்பு நிலைக்கு முட்டுக்கட்டையிட்டு பாடங்களைத் திணிக்காமல், அவர்களின் இயல்பிற்கேற்ப, எளிதில் கற்கும் கல்வியை அளிப்பதே எங்கள் நோக்கம். குழந்தைகளின் சுமைகளை புத்தகமூட்டைகளாலும் அதிகமாக்குவதை விடுத்து அவர்களின் ஆழ்மனதில் பதியும்படியான கல்வி அளிப்பதை நாங்கள் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

குழந்தையின் மனநிலைக்கேற்ப வகுப்பறைகளை அமைத்துள்ளோம். L.K.G. முதல் ஐந்தாம் வகுப்பு வரை 'செயல் பாடுகளின் வழி' கல்வி அளித்து வருகிறோம். நாங்கள் கையாளும் சில பயிற்றுமுறைகளையும் கற்றல்/கற்பித்தல் முறைகளையும் இங்கு காண்போம்.

தொடக்கக் கல்வி வகுப்புகளுக்கான கற்றல் நிகழ்வுகள் அனைத்தும் கீழ்க்கண்ட வளர்ச்சி நிலைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் எனத் தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம்.

1. மன வளர்ச்சி
2. மொழி வளர்ச்சி

3. உடல் வளர்ச்சி

4. ஆளுமை வளர்ச்சி

5. அறிவு வளர்ச்சி

6. சமூக வளர்ச்சி

மேற்கண்ட வளர்ச்சி நிலைகளை உள்ளடக்கிய செயல்பாடுகள் அனைத்து மாணவர்களையும் சமமாகச் சென்றடைய வேண்டும் என்பதே எங்களது நோக்கம்.

**தொடக்க வகுப்புகளில் நிகழும் கற்றல், கற்பித்தல்**

'தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு செல்லுதல்' என்ற விதியினை அடிப்படையாகக் கொண்டு எல்லாப் பாடத்திட்டங்களையும் தயார் செய்கிறோம். L.K.G. வகுப்பிற்கு முதலில் கோட்டு எழுத்துக்களை அறிமுகப்படுத்துகிறோம். இதற்குப் படங்கள் அடங்கிய அட்டைகளோடு வார்த்தை அட்டைகளையும் பயன்படுத்துகிறோம். இவ்வாறு, கற்பிப்பதால் எழுத்துக்களைக் குழந்தைகள் எளிதில் கற்கின்றனர். உதாரணமாக,

| | |
|---|---|
| ட, ப, ம, ர, ய | |
| டா, பா, மா, ரா, யா | - பதினைந்து எழுத்துக்கள் |
| ட், ப், ம், ர், ய் | |

இதேபோன்று ச, க, த, ந - வரிசையில் பன்னிரெண்டு எழுத்துக்கள் ஆகியவற்றைக் கற்பிக்கிறோம்.

U.K.G.வகுப்பிற்கு கோட்டு எழுத்துக்களிலிருந்து படிப்படியாக உயர்ந்து தொண்ணூற்றாறு எழுத்துக்களை (படங்களுடன் கூடிய வார்த்தைகளாக்கி) கற்பிக்கிறோம்.

L.K.G. யில் ஒரு குழந்தை இடைநின்று மீண்டும் U.K.G.யில் சேர்ந்தால் அக்குழந்தைக்கு, அது விட்டுச் சென்ற நிலையிலிருந்து கற்றல் /கற்பித்தல் நிகழ்வுகளைத் தொடங்குகிறோம். முதல் வகுப்பு வரும்போது ஒரு குழந்தையால் தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் (நடைமுறை பயன்பாட்டில் உள்ளவற்றை மட்டும்) சரியான முறையில் அடையாளம் காணும் விதத்தில் கற்றல்/கற்பித்தல் செயல்பாடுகளை அமைத்துக்கொண்டு உள்ளோம்.

முதல் வகுப்பு முதல் தமிழ்நாடு அரசு பாடத்திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. அரசு பாடப்புத்தகங்கள்

மட்டுமன்றி அறிவியல் இயக்கப் புத்தகங்களில் உள்ள செயல்பாடுகள், ஆசிரியப் பயிற்சியில் தரப்படும் செயல்பாடுகள், நூல்கள் மற்றும் கருத்தரங்குகள் வழி கற்றறிந்தவை ஆகியவற்றையும் பயிற்றுவித்தலுக்குப் பயன்படுத்துகிறோம். இவை அனைத்திலும் மேற்சொன்ன ஆறு வளர்ச்சி நிலைகளைக் கண்காணிக்கிறோம்.

ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒருமுறை அறிவியல் இயக்கப் பயிற்றுநர்களால் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகின்றது. இதனால், புதிய புதிய கற்றல்/கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெற வாய்ப்பு ஏற்படுகின்றது. மாணவர்களின் உள்வாங்கும் திறன் குறைதலுக்கு அவர்களின் பல்வேறு சூழ்நிலைகள் கருத்தில் கொள்ளப்பட்டு அதற்கேற்ப பயிற்றுமுறைகளில் மாற்றம் செய்கிறோம்.

பாடத்திட்டங்கள் தவிர மாணவர்கள் நலனில் அக்கறை கொண்ட ஏனைய சில முக்கிய செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றோம். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, அவர்களாகவே அச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் பயிற்சிகளை அளிக்கிறோம். அவற்றுள் சில:

**நூலகங்களைப் பயன்படுத்துதல்**

மாணவர்களின் கற்கும் நிலைக்குத் தகுந்தவாறு நூலகத்தில் புத்தகங்களை வாங்கி வைத்துள்ளோம். குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான புத்தகத்தை எடுத்து படிக்கலாம்.

*நோக்கம்*

* குழந்தைகளின் கற்பனைத்திறனை வளர்த்தல்

* அவர்களாகவே நூல்களைக் கண்டறிதல்

* வாசிப்பை வளர்த்தல்

* சேகரிப்பு திறன்

நூலகத்தில் கீழ்க்கண்டவாறு புத்தகங்களை வரிசைப்படுத்தி உள்ளோம்.

* படங்கள் அடங்கியவை

* படங்களோடு எளிய வார்த்தைகள் உள்ளவை

* கதைப்புத்தகங்கள்

**கதை சொல்லல், கதை கேட்கச் செய்தல்**

*நோக்கம்*

* குழந்தையின் தயக்கத்தைப் போக்குதல்
* கற்பனையைப் பெருக்குதல்
* பய உணர்வைப் போக்குதல்
* பேச்சுத் திறனை வளர்த்தல்
* கேட்டல் திறனை வளர்த்தல்
* கதை மாந்தரை அடையாளம் காணச் செய்தல்
* நடிப்புத்திறனை வளர்த்தல்
* ஆளுமையை வளர்த்தல்

நாங்கள் தயாரித்த உபகரணங்களின் உதவியோடும் உரிய முக பாவனைகளோடும் கதைகளைக் கூறி மாணவர்களை உற்சாகப்படுத்துவோம். அது மட்டுமல்லாமல் மாணவர்களையும் கதைகளைச் சொல்லச் செய்து அவற்றைப் படத்துடன் கூடிய தொகுப்பாக்குவோம். அதிலிருந்து அவர்களைக் கற்கத் தூண்டுவோம்.

**பாடல்கள்**

பல்வேறு விதமான பாடல்களை தொகுத்துள்ளோம்:

* பொருட்களை அறிமுகப்படுத்தும் பாடல்கள்
* இயற்கை மற்றும் சுற்றுப்புறத்தைப் பற்றிய பாடல்கள்
* கணிதப் பாடல்கள்
* அறிவியல் பாடல்கள்
* கடினமான பாடங்களை விளக்குவதற்கான பாடல்கள்

*நோக்கம்*

* குரல் வளத்தைப் பெருக்குதல்
* நம்பிக்கை ஏற்படுத்துதல்
* பாடங்களை எளிமையாக்கல்
* உடல் இயக்கத்தை வளர்த்தல்
* மகிழ்வூட்டல்

**நடிக்கப் பயிற்றுதல்**

* விலங்குகள், பறவைகள் போன்று ஒலி எழுப்புதல், நடித்தல்
* சின்னச் சின்னக் கதைகளை நடித்துக் காட்டல்

நோக்கம்:

* நம்பிக்கை ஏற்படுத்துதல்
* உடல் இயக்கத்தை வளர்த்தல்
* மகிழ்வூட்டல்

**கரும்பலகைச் செயல்பாடுகள்**

*நோக்கம்*

* மாணவர்களைச் சுதந்திரமாகக் கிறுக்க அனுமதித்தல்
* அளவில் பெரிதாக எழுதுவதற்குப் பழக்குதல்
* கூச்சமின்றி எழுதச் செய்தல்
* வரைதலுக்குப் பழக்குதல்

**வகுப்பறைப் பயன்படு பொருட்கள்**

* எழுத்து மின் அட்டைகள்
* வார்த்தை மின் அட்டைகள்
* வாக்கிய மின்அட்டைகள்
* 'பிளாஸ்டிக்' எழுத்துக்கள்
* செய்தித்தாள்கள்
* காகிதத்தில் எழுதப்பட்ட எழுத்துக்கள்
* பென்சில்
* பொருட்கள், அவற்றிற்கான படங்கள்

*நோக்கம்*

படத்தோடு வார்த்தைகள் அடங்கிய அட்டைகளையும் பொருட்களையும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துகிறோம். படங்களையும் வார்த்தை அட்டைகளையும் தனித்தனியாகக் கலைத்துப் போட்டு மாணவர்களை தானாக இணைக்கச்

செய்கிறோம். வார்த்தை அட்டைகளில் உள்ள எழுத்துக்களை எழுத்தட்டைகளைக் கொண்டு நிரப்பச்செய்கிறோம். இதே போல் வாக்கிய அமைப்பிற்கு வார்த்தை அட்டைகளைப் பயன்படுத்தலாம். செய்தித்தாள்களில் உள்ள படங்களை அல்லது ஓர் குறிப்பிட்ட எழுத்தை வெட்டி ஒட்டச் செய்கிறோம். ஒரு குறிப்பிட்ட வார்த்தையைத் தனித்தனி எழுத்துக்களாக வெட்டி மீண்டும் அந்த வார்த்தையை உருவாக்கச் செய்கிறோம். படங்களுக்கேற்ற வார்த்தைகளை வெட்டி ஒட்டச் செய்கிறோம்.

## நன்றியுடையோம்

தமிழ்மொழி வளமை பெற
பல்வேறு தளங்கில் இயங்கிவரும் -
பண்பாட்டு ஆய்வாளர்
பேரா. தொ.பரமசிவன் அவர்களுக்கும்
மக்கள் படைப்பாளி
திரு.ச.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும்
மொழியியல் அறிஞர்
முனைவர் த.பரசுராமன் அவர்களுக்கும்
நாடகப் பின்புலத்தைக் கற்பித்தலில் சேர்க்கும்
முனைவர் எம்.எஸ்.காந்திமேரி அவர்களுக்கும்
இனவரைவியல் இசை அறிஞர்
பணி. வின்செண்ட்பிரிட்டோ அவர்களுக்கும்
சிறார் வழக்காற்று ஆய்வாளர்
முனைவர் டி.தருமராஜ் அவர்களுக்கும்
தரவுகளைத் திரட்டி அனுப்பி உதவும்
சகோ. அருள்மேரி (தமிழாசிரியை) அவர்களுக்கும்
களப்பணி மேற்கொண்ட போது
துணை நின்ற நண்பர்களுக்கும்
தகவலாளிகளான ஆசிரியர்களுக்கும்
ஒத்துழைத்த பள்ளிகளுக்கும்
பயிலரங்குகளுக்கு இடமளித்ததோடு
இணைந்து பங்காற்றிய
பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்திற்கும்
திருச்சி க்ரியா குழந்தைகள் பள்ளிக்கும்
நிதிஉதவி வழங்கி இவ்வாய்வை சாத்தியப்படுத்திய
HIVOS ஆய்வு நிறுவத்திற்கும்

## வாழ்க்கையிலிருந்து வார்த்தைக்கு

* குழந்தைகளுக்கான கல்விமொழி பொது மொழியா? பேச்சு மொழியா?

* குழந்தைகளுக்கு மொழியின் மீது ஆர்வத்தையும் அவர்களின் கற்பனை வளத்தையும் வளர்த்தெடுக்க எதிலிருந்து தொடங்குவது நல்லது? வட்டார மொழியினூடாகப் பொது மொழிக்குச் செல்லலாமா?

* பேச்சுக்கும் எழுத்திற்குமான இடைவெளியை எவ்வாறு நிரப்புவது?

* சூழல் சார்ந்த மொழிகல்விக்குரிய உள்ளடக்கம் எப்படி அமைக்கப்பட வேண்டும்? இயற்கை, ஊர், கதைகள், நம்பிக்கைகள், தொழில்கள், விழாக்கள் என விரிவது சரியா?

* சூழலுடன் பிரிக்க முடியாத அளவிற்கு கலந்து ள்ள சாதிய, பால் வேறுபாடுகளை எப்படி கையாளுவது?

* குழந்தைகளுக்கான மொழிக் கல்வியில் இலக்கியத்தின் பங்கு என்ன? தொன்மையான இலக்கியங்களின் அறிமுகம் குழந்தைகளுக்குத் தேவையா?

* நீதி சொல்வது, அறிவுரை கூறுவது போன்ற பாடங்களின் அவசியம் என்ன? இவற்றைத் தவிர்த்து விட்டால் என்ன ஆகும்?

மேற்கூறிய கேள்விகளை எழுப்புவதன்மூலம் தமிழ் மொழிக்கல்வி குறித்த விரிவான விவாதத்தை தொடங்கி வைக்கும் முயற்சியாக இந்நூல் இருக்கும் என்று நம்புகிறோம்.

- வ.கீதா

ISBN 81-86211-88-8
9 788186 211885 >
விலை: ரூ. 10

TARA PUBLISHING
www.tarabooks.com